Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 289 | திங்கட்கிழமை | ஆவணி 28 ஆம் நாள் 13 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## கொரோனா பலி 144

கொழும்பு, செப். 13
இலங்கையில் மேலும் 144 பேர் கொரோனாத் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் 15

# ஜெனிவா அமர்வு இன்று ஆரம்பம்!

## இலங்கை தொடர்பிலும் முக்கிய அவதானம்



கொழும்பு, செப்ரெம்பர் 13
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது. ஒக்ரோபர் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பிலும் முக்கிய அவதானம் செலுத்தப்படவுள்ளது. 15

## 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் துரிதமாகத் தடுப்பூசி பெறவும்

### இராணுவத்தளபதி அறிவிப்பு



கொழும்பு, செப். 13
30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் துரிதமாகத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கொரோனா தடுப்புச் செயலணியின் பிரதானியும், 15

## அந்தோனியாராக மாறிய பிள்ளையார்



மன்னார், செப். 13
மடுவில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்த பகுதியில், அந்தச் சிலை அகற்றப்பட்டு அந்தோனியார் சிலை வைக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
மடு பரப்புக்கடந்தான் வீதியில் மடு தேவாலயத்திலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்திலிருந்த பிள்ளையார் சிலை ஒன்று மாயமாகியுள்ளதுடன், அதே தினத்தில் குறித்த இடத்தில் 15

## கொரோனாவால் கர்ப்பிணி சாவு!

யாழ்ப்பாணம், செப். 13
நாவாந்துறையைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.
கடந்த முதலாம் திகதி காய்ச்சல் காரணமாக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போது அவ 15

## 4 மில். பைசர் ஊசிகள் அடுத்தமாதம் இறக்குமதி

### மாணவர்களுக்கு ஒதுக்கத் திட்டம்

கொழும்பு, செப். 13
இலங்கைக்கு அடுத்தமாதம் மேலும் 4 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன எனவும், அவற்றை பாடசாலை மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். 15

## கொரோனா 2,641

கொழும்பு, செப். 13
இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 641 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 85 ஆயிரத்து 302ஆக எகிறியுள்ளது.
இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,579 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ள 15

### சிறைக்கைதிகள் தினத்தையொட்டி

## அரசியல் கைதிகளை விடுவிக்க பிரார்த்தனை

யாழ்ப்பாணம், செப். 13
தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு, அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தீபங்கள் ஏற்றி பிரார்த்திக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.
யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது. இருட்டுக்குள் இருக்கின்ற அரசியல் கைதிகளின் வாழ்வில் ஒளியூட்டுவதை பிரதி 15

## மயங்கியவர் திடீர்ச் சாவு

யாழ்ப்பாணம், செப். 13
வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் திடீரென மயக்கமடைந்து வீழ்ந்த நிலையில் உயிரிழந்தார். அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை எடுக்க உத்தரவிடப்பட் 15

## இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் கல்வி வாய்ப்புக்கள்!

கொழும்பு, செப். 13
இலங்கை மாணவர்களுக்கு அதிக கல்வி வாய்ப்புக்களை வழங்க இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே உறுதியளித்துள்ளார். கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவை அவரது அமைச்சில் சந்தித்தபோதே இந்தியத் தூதுவர் இதனைக் கூறியுள்ளார்.
இந்தியத் தூதுவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசின் உதவியுடன் உயர் தொழில் 15

### வல்வெட்டித்துறை கொலை

## சந்தேக நபர்கள் இருவர் கைது!

### திருகோணமலையில் சிக்கினர்

யாழ்ப்பாணம், செப். 13
சில வாரங்களுக்கு முன்னர் குடும்பத் தகராறு காரணமாக வல்வெட்டித்துறையில் குடும்பத் தலைவர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட நிலையில், அந்தக் கொலையுடன் தொடர்புடைய 15

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், செப். 13
யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். சின்னத்தம்பி சாந்தகுணமூர்த்தி (வயது 67) என்னும் முதியவரே உயிரிழந்தவர்.
பால் வியாபாரம் செய்யும் இவர் நேற்றுமுன்தினம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாக்கால பிரச்சினைகள்: இளையோருக்குக் கருத்தமர்வு

## வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு சூம் செயலியில் நடத்துகின்றது

யாழ்ப்பாணம், செப். 13

**கொரோனாத் தொற்று அபாயம் மற்றும் நாடு முழுவதுமான முடக்கம் காரணமாக, சாத்தியமாகக்கூடிய உளம்சார் பிரச்சினைகள் தொடர்பில் இளம் யுவதிகளுக்கு 'சூம்' செயலி ஊடாக கருத்தமர்வு நடைபெறவுள்ளது.**

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கல்வி அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது


இந்தக் கருத்தமர்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை மற்றும் மறுநாள் வியாழக்கிழமை ஆகிய நாள்களில் முற்பகல் 9 தொடக்கம் மதியம் 12 வரை நடைபெறவுள்ளது.

'பெரும் தொற்றுக்கான மன ஆரோக்கியம் மற்றும் இளையோரும் திறன்விருத்தியும்' எனும் தலைப்புகளில் இந்தக் கருத்தமர்வு நடைபெறவுள்ளது. சூம் செயலி ஊடான குறித்த கருத்தமர்வுகளை யாழ்.போதனா மருத்துவமனையின் மனநல மருத்துவ நிபுணர் சி.சிவதாசன் நடத்துவார்.

இந்தக் கருத்தமர்வில் பங்குபற்றும் இளைஞர்களுக்கு பங்குபற்றுதலுக்கான சான்றிதழ் பின்னர் வழங்கப்படும்.

குறித்த நிகழ்வுக்கான மேலதிக விவரங்கள் மற்றும் இணைப்புக்கள் என்பவற்றை இணையத்தள முகவரி http://edumin.np.gov.lk மற்றும் https://www.facebook.com/youthnorth ஆகியவற்றை அணுகவும்.

தொடர்ச்சியாக நடைபெறவுள்ள கருத்தமர்வுகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றின் விவரங்கள் உரிய காலத்தில் இந்த இணையத்தளங்களில் காட்சிப்படுத்தப்படும் என்று மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலர் சு.சிவப்பிரியா குறிப்பிட்டுள்ளார். (த)



# முல்லை. பொலிஸ் நிலையத்தில் வெடித்து அழிந்த வெடிபொருள்

ஒருவர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை

முல்லைத்தீவு, செப். 13

முல்லைத்தீவில் சட்டவிரோத வெடிபொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கடற்படையினர், ஒருவரைப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். எனினும், அவருடன் ஒப்படைக்கப்பட்ட வெடிபொருள் பொலிஸ் நிலையத்தில் வெடித்து அழிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வலைஞர்மடம் பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை அவரைக் கடற்படையினர் பிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட பொருள்களுடன் அவர் முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

வெடிபொருளும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெடிபொருள் தீப்பற்றி வெடித்து அழிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 32 வயதுடைய நபர், பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ளார். விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-19)



# 3 லயன்ஸ் கழகங்கள் இணைந்து குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மூன்று லயன்ஸ் கழகங்கள் இணைந்து நேற்று குருதிக் கொடை நிகழ்வை நடத்தின.

காங்கேசன்துறை வள்ளுவர்புரம் தையிட்டி கிழக்கு அன்னை வேளாங்கன்னி மாதா ஆலய மண்டபத்தில் இது நடைபெற்றது.

இருபாலை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகம், காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகம், உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இதை நடத்தின.

20க்கும் மேற்பட்டோர் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி குருதி வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பேர்ள் கப்பலை அகற்றும் பணிகள் நவம்பரில் ஆரம்பம்

கொழும்பு, செப்.13

கொழும்பு கடற்பரப்பில் தீப் பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை அகற்றும் பணி எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பருவக்காற்றுக் காரணமாக கப்பலை அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் கப்பலை அகற்றுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கப்பல் வைத்திருக்கும் நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்காக சர்வதேச நிறுவனங்களிமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளது. கப்பல் அகற்றப்படுவதால் நாட்டின் கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்துமா என்பது குறித்து ஆராய விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல் கொழும்பு கடற்பரப்பில் தீப்பற்றியதால், இலங்கை மிகப்பெரிய அழிவைச் சந்தித்தது. இதன் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடல் ஆமைகளும், சுமார் 45 டொல்பின்களும் உயிரிழந்துள்ளன. அதேவேளை கப்பல் நிறுவனம் ஆரம்ப கட்ட நஷ்டஈடாக 72 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது. (எ-4-22)

# சினோபார்ம் தடுப்பூசி இலங்கையில் தயாரிப்பு?

கொழும்பு, செப்.13

சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியை, இலங்கையில் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவின் சினோபார்ம் நிறுவனத்தின் தலைவர் லியு ஜின்க்சன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கோஹேன ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடலில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்களுக்காக சினோபார்ம் நிறுவனம் தொடர்ந்து வழங்கும் ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்து வழங்கிய கடிதத்தையும் சீனாவுக்கான தூதுவர், சினோபார்ம் நிறுவனத் தலைவரிடம் வழங்கினார்.

இதன்போது சினோபார்ம் நிறுவனத் தலைவர் தெரிவிக்கையில், எமது நிறுவனம் இலங்கைக்கு தொடர்ந்து தடுப்பூசிகளை வழங்கும்.

தற்போது இந்தத் தடுப்பூசி 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது. 50க்கும் மேற்பட்ட அரச தலைவர்கள் கூட இந்தத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் சினோபார்ம் தடுப்பூசி பெற்றவர்களுக்கு எவ்விதமான பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை என்றார். (எ-4)

# நாடு திரும்புவோரிடம் பெருமளவு பணமோசடி

கொழும்பு, செப்.13

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வருபவர்கள், தனிமைப்படுத்தப்படும்போது, பெருமளவு பணத்தை இழக்க நேரிட்டுள்ளது.

தற்போதைய கொரோனா சூழ்நிலையால் வெளிநாடுகளில் இருந்து வருவோர்களுக்கு, கொரோனாப் பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெறும் வரையில், ஹொட்டல்களில் தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

அவர்கள் தனிமைப்படுத்தப்படும் குறித்த காலப்பகுதிக்கு மாத்திரம் அதிகளவான பணம் அறவிடப்படுகின்றது என்று சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தற்போதைய கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் நாளாந்தம் 2 ஆயிரம் பேர் வரை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தருகின்றனர்.

அவ்வாறு வருகை தரும் இலங்கையர்கள் உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகள், இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றிருந்தாலும் கொவிட் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கை கிடைக்கப்பெறும் வரையில் ஹொட்டல்களில் தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

இங்கு தனிமைப்படுத்தும் காலப்பகுதிக்கு மேலதிகமாக கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விரைவில் பரிசோதனை அறிக்கையைப் பெறக் கூடிய ரெப்பிட் பி.சி.ஆர் பரிசோதனை வசதிகள் காணப்படுகின்ற நிலையிலும், இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான வரிக்கொள்கையால் பொருளாதாரம் பின்னடைவு!



**கொழும்பு, செப். 13**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு எடுத்த தவறான முடிவுகளால் நாடு இன்று பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டினார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

'ஜனாதிபதியின் வெற்றிக்குப் பின்னர் அரசு எடுத்த தவறான வரிக்குறைப்பின் முடிவின் விளைவாக நாடு வருவாயை இழந்துள்ளது. 12 சதவீத வரியை 8 சதவீதமாகக் குறைத்ததால் அரசு கிட்டத்தட்ட 6 லட்சத்து 700 பில்லியன் ரூபாவை இழந்தது. இதன் விளைவாக, அரசுக்கு வருவாய் குறைந்துள்ளதால் அதனை ஈடுசெய்யும் முகமாக, அரசு 1,250 பில்லியன் ரூபாவைத் தற்போது அச்சிட்டுள்ளது.

இதன்விளைவாக, பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளதோடு பணவீக்கமும் அதிகரித்துள்ளது. இன்று அந்நியச் செலாவணிக் கையிருப்பு கிட்டத்தட்ட 2.9 பில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது. இன்று எந்த உலக நாடுகளும் அரசுக்கு நிதி உதவியை அல்லது கடன் தொகையை வழங்க ஒப்புக்கொள்வதாக இல்லை.

நமது பொருளாதாரப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனவே தவிர, அவற்றில் எதுவுமே குறைவதாக இல்லை. அதனைத் தீர்ப்பதற்கான முயற்சிகளையும் காணமுடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

கொரோனா ஆரம்பம் முதலே இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டன.

அடுத்து, சில அரச சார்பு நண்பர்களுக்கு பொருள்களை இறக்குமதி செய்வதற்காகவும், அவர்களுக்கு அனுமதிப்பத்திர முறைமையுடன் சலுகைகள் வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. அரசுடன் இருந்தவர்களுக்கு இந்த வழியில் இறக்குமதி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதனால் எதிர்பார்த்த டொலர் கையிருப்பு அதிகரிக்காமல் குறைவடைந்ததால், பல்வேறு விடயங்களைக் காலத்துக்குக் காலம் கொண்டு வந்தனர். உரங்களுக்கான இறக்குமதிக்குத் தடைவிதித்தனர். எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பெற்றோலியத்துறை அமைச்சர் கேட்டார் என்று அரசு கடந்த காலங்களில் பலமுறை கூறியுள்ளது. அது குறித்த மாறுபட்ட அனைத்துவிதமான கதைகளையும் அரசு உருவாக்கியது.

எண்ணெய் விலையை அதிகரித்தது ஜனாதிபதிதான். பெற்றோலியத்தைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று அவர் ஓர் அறிக்கையையும் வெளியிட்டார். டொலர்கள் பற்றாக்குறை பற்றி அவர் கூறவில்லை. டொலர்கள் பற்றாக்குறையின் கதையைப் பெற்றோலியத்துறை அமைச்சர் கூறினார். அரசால் இவற்றை ஈடுசெய்ய முடியாத போது, ஜனாதிபதி பல்வேறு மாற்று விடயங்களைக் கூறினார். மஞ்சள் இறக்குமதி செய்வதை நிறுத்திய போது, நம் நாட்டில் மஞ்சள் பயிரிடப்போவதாகக் கூறப்பட்டது. டொலர் பற்றாக்குறையுள்ளதாகச் சொல்லவில்லை'- என்றார். (ம-22)





# கப்ராலுக்குப் பதில் ஜயந்த கெட்டகொட

கொழும்பு, செப்.13

மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்படவுள்ள நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு, நடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவை மீண்டும் நியமிப்பது தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுன அவதானம் செலுத்தியுள்ளது.

பஸில் ராஜபக்சவை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்க வாய்ப்பளித்த ஜெயந்த கெட்டகொட, தனது நாடாளுமன்ற உறுப்புரிமையில் இருந்து ஏற்கனவே விலகியிருந்தார்.

இந்த நிலையில் மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டி.லக்ஸ்மன் விரைவில் தனது பதவியிலிருந்து விலகவுள்ளார். அஜித் நிவாட் கப்ரால் மீள அந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார்.

இதற்காக அஜித் நிவாட் கப்ரால் தனது நாடாளுமன்ற உறுப்புரிமையில் இருந்து விலக உள்ளார். வெற்றிடமாகும் தேசியப் பட்டியலின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு, ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படவுள்ளார். (எ-4)

# விசேட சுற்றிவளைப்பில் கஞ்சாவுடன் மூவர் கைது

கொழும்பு, செப்.13

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில், நான்கு கோடி ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

களனி மற்றும் கிரிபத்கொட ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், கிரிபத்கொட, களனிய,, கடுவல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 262 கிலோ கேரளக் கஞ்சாவும், 10 லட்சம் ரூபா பணமும், விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் கப் ரக வாகனத்தில் பயணித்த போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4,22)



# உணவுத் தட்டுப்பாடு இலங்கையில் இல்லை

## நிதியமைச்சு கூறுகிறது

கொழும்பு, செப்.13

இலங்கையில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு இல்லை என்றால் ஏன் உணவு விநியோக அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று குறித்த சர்வதேச ஊடகத்தின் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கையும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. விவேகமான கொள்கைகள் மூலம் அவற்றை எதிர்கொள்ள முடியும். இந்த வருடம் இலங்கையின் பொருளாதாரம் 4.5 வீத வளர்ச்சியைப் பதிவு செய்யும். நாட்டில் சில மோசமான வர்த்தகர்கள் செயற்கையாக உணவுத் தட்டுப்பாட்டை உருவாக்கி, இலாபம் ஈட்டப் பார்க்கின்றனர். அதனைத் தடுப்பதற்காகவே அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் பதிலளித்தார். (எ-4,22)

# நீராடச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, செப்.13

கடலில் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவர், நீரில் மூழ்கி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என்று ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் தைக்கா வீதியைச் சேர்ந்த சிறுவன், தனது 5 நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்றபோதே நீரில் மூழ்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக ஏறாவூர் ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-4)

# நிதி நெருக்கடியைச் சமாளிக்க அமெ. நிறுவனத்திடமும் கடன்

கொழும்பு, செப்.13

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிக்க, அமெரிக்க நிறுவனத்திடம் இருந்து 250 கோடி அமெரிக்க டொலர் நிதியைக் கடனாகப் பெற்றுக் கொள்ள எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட கான்செப்ட் குளோபல் என்ற நிதி நிறுவனத்திடமிருந்து, கடனைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தக் கடனுக்கு 2 வருடங்கள் சலுகைக் காலமும், திருப்பிச் செலுத்தும் காலம் 12 வருடங்களாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் 3 வீத ஆண்டு வட்டியும் கொடுக்க நேரிடும் என்று எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு சுமார் 330 மில்லியன் டொலர் நிதியைச் செலுத்த வேண்டியுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். இதனால் 2 அரச வங்கிகளுக்கிடையே நிலுவையில் உள்ள கடன் பிரச்சினையைத் தீர்க்க முடியாதுள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கொள்கைகளில் விரைவில் மாற்றங்கள்!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, செப்.13**

**நாட்டுக்கு அவசியமான வகையில் தேசிய கல்விக் கொள்கை மாற்றியமைக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கல்வி அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பாடசாலைகளில் நிலவும் அதிபர் பற்றாக்குறைக்கு உரிய நடைமுறையொன்று விரைவில் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள ஆசிரியர் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பது சிக்கலாக மாறியுள்ளது என்று சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆசிரியர்களின் பணியிடத் தெரிவு தொடர்பான வேலைத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார். கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மாற்றும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அரச மொழிகள் வீழ்ச்சியுறும் நிலைக்குச் சென்றுள்ளன என்று அமைச்சர் வாசுதேவ நாணயகார சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்து கருத்துத் தெரிவித்தார். தற்போது ஆங்கிலம் கல்வி மொழியாகி வருவது தொடர்பிலும் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதேவேளை இலங்கைச் சட்டத்தை ஒரு பாடமாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்வாங்குவதற்கான தொழில்நுட்பக்குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் உபகுழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தை தனியானதொரு பாடமாக அல்லாது குடியியல் கல்வியில் ஒரு பகுதியாக உள்வாங்க வேண்டும் என்றும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பிலும், அதில் விடயங்கள் உள்ளடக்கப்படுவது முக்கியமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய சூம் தொழில்நுட்பத்தின் ஊடான கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார். சட்டத்துக்கும் சமூகத்துக்கும் இடையில் காணப்படும் உறவு இதில் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்களை நிரந்தரமாக்குவதற்கு உரிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்த ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் செயற்றிட்டத்துக்கு பாடசாலைகளைத் தெரிவு செய்வதில் ஒழுங்கீனம் காணப்படுகிறது என்பது குழுவில் பெரும்பாலானவர்களின் நிலைப்பாடாக இருந்தது. இந்தத் திட்டத்தை மீளாய்வு செய்யுமாறு குழுவின் தலைவர், கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவுக்குத் தெரிவித்தார்.

தினேஷ் குணவர்த்தன, கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது கூட்டம் இதுவாகும். (ஏ-4)

# சிறுவர்களுக்கே பைஸர் தடுப்பூசி

## மருத்துவர்கள் மீண்டும் கோரிக்கை

கொழும்பு, செப்.13

உலகளாவிய ரீதியில் சிறுவர்களுக்கு ஏற்றப்பட வேண்டிய ஒரே சிறந்த தடுப்பூசி பைஸர் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே அதைச் சிறுவர்களுக்கு முன்னுரிமை அளித்துச் செலுத்த வேண்டும் என்று மருத்துவர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளதாவது தற்போது சிறுவர்கள் தொற்றுக்குள்ளாகும் நிலை அதிகரித்துள்ளது. இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது. எனவே அவர்களுக்குத் தடுப்பூசி செலுத்த வேண்டியது அவசியம். அவர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி, பல பிரதேசங்களிலும் பல்வேறு வயது மட்டங்களின் கீழ், அரசியல்வாதிகளின் தேவைகளுக்கு அமைய செலுத்தப்படுகின்றது.

விசேட மருத்துவர் குழுவின் கோரிக்கைக்கு அப்பால் இவ்வாறு தடுப்பூசி செலுத்தப்படுகின்றது. இதனால் ஏற்படும் முரண்பாடுகளால் விசேட மருத்துவர் குழுவிலிருந்து மருத்துவர்களும் விலகுகின்றனர். இந்த முரண்பாடு எதிர்காலத்தில் ஏற்பட இடமளிக்க வேண்டாம். பைஸர் தடுப்பூசியை சிறுவர்களுக்கு ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எதிர்வரும் வாரங்களில் இலங்கைக்குக் கிடைக்கவுள்ள 4 மில்லியன் பைஸர் தடுப்பூசிகளை சிறுவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியர்களது கோரிக்கை போலவே சிறுவர்களுக்காகவும் குரல்கொடுத்து, தடுப்பூசியைச் செலுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்து பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனைய வயதுப்பிரிவினருக்கு ஏனைய தடுப்பூசிகள் உள்ளன. கிடைக்கவுள்ள பைஸர் தடுப்பூசியை சிறுவர்களுக்கு ஒதுக்கவும். இல்லையேல் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பில் அண்மையில் சந்திக்கும் துரதிஷ்ட சம்பவங்கள் போல், சிறுவர்கள் தொடர்பிலும் சந்திக்க நேரிடும். என்றார். (ஏ-4)

# போதைப்பொருள்களுடன் வெளிநாட்டுக் கப்பல் மீட்பு

கொழும்பு, செப்.13

பெருந்தொகைப் போதைப்பொருள்களை, இலங்கைக்குக் கடத்தி வந்த வெளிநாட்டுக் கப்பல் ஒன்று மட்டக்களப்புத் தெற்குக் கடலில் நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, குறித்த கப்பல் சுற்றிவளைக்கப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்போது கப்பலில் இருந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், கப்பல் மற்றும் போதைப்பொருள்களுடன், இலங்கைக் கடற்பரப்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-4)

# தடுப்பூசிகள் சிலவற்றால் நரம்புக் கோளாறு ஏற்பட வாய்ப்பு!

கொழும்பு, செப்.13

அஸ்ராஜெனகா மற்றும் மொடர்னா தடுப்பூசிகளைப் பெற்றவர்களுக்கு, மிகவும் அரிதாக நரம்புக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது என்று ஐரோப்பிய மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கில்லென் பார்ஸ் சிண்ட்ரோம் (GuillainBarr syndrome) என்று அழைக்கப்படும் இந்த அரிய வகை நோய் பாதிப்பானது, நோய் எதிர்ப்பு சக்தியால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதைக் குறிக்கின்றது என்று நிறுவனத்தின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜூலை 31 ஆம் திகதி வரை உலகம் முழுவதும் 59.2 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. அவர்களில் 833 பேருக்கு மட்டுமே இத்தகைய நரம்புக் கோளாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ-4)

# 3000 பாடசாலைகள் முதற்கட்டமாக திறப்பு?

கொழும்பு, செப்.13

100 க்கும் குறைந்தளவான மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட 3 ஆயிரம் பாடசாலைகளை முதற்கட்டமாகத் திறப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் காணொலி தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்ற கொவிட் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கான பொறுப்பைச் சுகாதாரம் மற்றும் கல்வித்துறைசார் அதிகாரிகளைக் கொண்ட தொழிநுட்பக் குழுவிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். தற்போது பாடசாலைகள் மூடப்பட்டதால், சுமார் 7 லட்சம் மாணவர்கள் ஆரம்பக் கல்வியையும், பல மாணவர்கள் முன்பள்ளிப் பருவக் கல்வியையும் இழந்துள்ளமை தொடர்பில் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (ஏ-4)

# நுவரெலியா மாவட்டத்தில் குறைகிறது பிறப்பு வீதம்!

கொழும்பு,செப்.13

நுவரெலியா மாவட்டத்தில் பிறப்புவீதம் குறைந்து வருகின்றது.

இந்த மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் 52 ஆயிரத்து 183 குடும்பக் கட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மாகாண சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்ட குடும்பக்கட்டுப்பாடுகள் தொடர்பான முழுமையான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைவாக குடும்பக்கட்டுப்பாடு முறைகளான லூப்ஸ், மாத்திரை, தடுப்பூசி, ஆண்களுக்கான தூய்மையாக்கி பெண்களுக்கான தூய்மையாக்கி மற்றும் வேறு முறைகளில் நுவரெலியாவில் குடும்பக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 5 வருடங்களுக்குள் 52 ஆயிரத்து 183 பேருக்கு குடும்பக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சராசரியாக வருடம் ஒன்றுக்கு 10 ஆயிரத்து 403 பேருக்கு குடும்பக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுவது இதனூடாக உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஏ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அம்மணமாகும் அரசாங்கம்


'தனிமைப்படுத்தல் ஊரடங்கு' என்ற பெயரோடு மூன்றாவது முறையாக நாடு முடக்கப்பட்டபோது, ஓகஸ்ட் 20ஆம் திகதி இரவு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தினார். 'இனிவரும் காலங்களில் முடக்கத்தால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ள இலங்கை மக்கள் பெரும் தியாகங்களைச் செய்யத் தயாராக இருக்கவேண்டும்' என்பதே அந்த உரையின் சாராம்சம். ஏற்கனவே இந்த அரசாங்கத்தால் வாழ்வாதாரச் சுமையைத் தாங்கமுடியாமல் துயரில் உழன்ற ஒட்டுமொத்த இலங்கை மக்களிடத்தும் 'இதைவிட இனியென்ன தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது?' என்ற கேள்வியே மேலெழுந்தது. அந்தக் கேள்விக்கான பதிலை கோத்தாபய அரசாங்கம் கட்டம் கட்டமாக சொல்லிக்கொண்டு வருகின்றது.

பால்மா, சீனி, சமையல் எரிவாயு என்று தொடங்கிய அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடும் விலையேற்றமும் இப்போது கோதுமை மா வரை நீண்டுகொண்டே போகின்றது.பல இடங்களில் அத்தியாவசியப் பொருள்களைக் கண்ணால் காண்பதே பேரதிசயமான ஒன்றாக மாறிவிட்டது. அப்படி அவை இருந்தாலும் கூட, மூன்றாவது முடக்கத்துக்கு முன்னர் இருந்த விலையை விடவும் இப்போது அதிக தொகை கொடுத்தே இந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டியிருக்கிறது. போதாக்குறைக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்ற அரைகுறை முடக்கத்தால் மக்கள் வீதிகளை அதிகம் நிறைத்தாலும், பலரின் தொழில் வாய்ப்புகள் அடிபட்டுப் போயுள்ளன என்பதே யதார்த்தம். குறிப்பாக நாளாந்த வருமானத்தைப் பெற்றுவந்தவர்களின் வாழ்வே முடங்கிப் போயுள்ளது.

'நாட்டை முடக்கினால் நாளாந்தத் தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னோம்தானே. அதையும் மீறி உங்களின் அழுத்தத்தால் நாட்டை முடக்கியதன் விளைவைப் பார்த்தீர்களா?' என அரசாங்கம் எதிர்க் கட்சிகளையும், மருத்துவ அதிகாரிகள் சங்கங்களையும், மகாநாயக்கர்களையும் பார்த்துக் கேட்கக்கூடும். ஆனால் இதுவொன்றும் முதல் முடக்கமல்ல, மூன்றாவது முடக்கம். ஆகவே இதற்கு முந்தைய இரண்டு முடக்கங்களின் போதும் பெற்ற பாடங்களில் இருந்து மூன்றாவது முடக்கத்தில் பாதிக்கப்படுவோருக்கான மாற்று ஏற்பாடுகளை அரசாங்கம் கண்டுபிடித்து, அவற்றை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அதையெல்லாம் கண்டுபிடிக்கத் தேவையான அக்கறையோ, கரிசனையோ இந்த அரசாங்கத்துக்கு அறவே கிடையாது. அப்படி முன்னைய முடக்க அனுபவங்களை வைத்து நாளாந்த வருமானத்தை நம்பியிருப்போருக்கு ஏதேனும் வாழ்வாதார வழிகளை ஏற்படுத்தி, இந்தத் தனிமைப்படுத்தல் ஊரடங்கை இறுக்கமான முடக்கமாகப் பேணியிருந்தால், நிச்சயமாக கொரோனாவை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தியிருக்கமுடியும். ஆனால் அப்படியான நல்லகாரியங்களைச் செய்துதான் இந்த அரசாங்கத்துக்குப் பழக்கமேயில்லையே. வேண்டுமானால் மந்திரித்த நீரை பானைகளில் கொண்டுசென்று ஆற்றில் போடுவது போன்ற இலங்கைக்கேயான கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகளை(?) மட்டுமே செய்ய இந்த அரசாங்கத்தால் இயலும். அப்படி மந்திரித்த பானைகளைக் கொண்டு சென்று ஆற்றில் போட்டவர் கூட இப்போது கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருப்பது வேறுகதை.

இப்படியொரு இயலாமை அரசாங்கத்தின் பிற்போக்குத்தனமான முடிவுகளால், இருப்பதையும் இழக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. அப்படி இழக்க வைப்பதைத்தான் 'தியாகம் செய்யத் தயாராக இருங்கள்' என்று ஜனாதிபதி முன்னேற்பாடாக சொல்லிவைத்திருக்கிறார் போலும். ஆனால் அந்தத் தியாகம் எல்லைமீறிக் கொண்டிருக்கிறது. 'இனிமேல் இரு வேளை மட்டுமே உணவு உண்ணுங்கள்' என்கிறார் ஓர் அமைச்சர். மற்றோர் அமைச்சரோ 'உள்ளாடைகளுக்குத் தட்டுப்பாடு வராது, சதோச மூலம் உள்ளாடைகளையும் விற்பனை செய்வோம்' என்கிறார்.

உலகிலேயே உள்ளாடைகளுக்குத் தட்டுப்பாடு வரப் போகும் நாடாக இலங்கை மாறப்போகின்றது. அதேசமயம் உள்ளாடைகளை பங்கீட்டு அடிப்படையில் விநியோகித்த நாடாகவும் இலங்கை வரலாற்றில் இடம்பிடிக்கப் போகின்றது. இதைத்தான் சொல்வது 'பட்டுவேட்டிக் கனவில் இருந்தபோது கட்டிய கோவணமும் களவாடப்பட்டது' என்று. உணவு முதல் உள்ளாடை வரை எல்லாவற்றையும் இல்லாமல் ஆக்கிவிட்டு, மக்களை நிர்க்கதியாக்கிவிட்டு, இந்த அரசாங்கம் அரசியலில் அம்மணமாகிவிட்டதென்பதே உண்மை.




# விஞ்ஞானபூர்வமான முடக்கமே பயன்தரும்

### மருத்துவ ஆய்வுகூட நிபுணர் சங்கம் மீண்டும் வலியுறுத்து

**கொழும்பு, செப்.13**

**எதிர்பார்த்த பெறுபேற்றை அடைவதற்கு, இன்னும் இரு மாதங்களாவது முடக்கல் நிலை தொடரவேண்டும். அதனால் தான் நாட்டை விஞ்ஞானபூர்வமாக முடக்குமாறு நாம் வலியுறுத்தினோம். ஆனால் நகைச்சுவைத்தனமான 'லொக்டவுன்' நடைமுறையே தற்போது நடைமுறையில் உள்ளது என்று மருத்துவ ஆய்வு கூட நிபுணர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் கொரோனாப் பரிசோதனைகளை அதிகரிக்குமாறும், துரிதப்படுத்துமாறும் கோரியிருந்தோம். ஆனால் நாளாந்தம் பரிசோதனைகளின் அளவு குறைக்கப்படுவதையே காணமுடிகின்றது.

ஆசியாவிலேயே அதிக தடவைகள் லொக்டவுன் நடைமுறைக்கு சென்ற நாடு இலங்கையாகும். அதேபோன்று லொக்டவுன் காலத்தில் நடமாட்டம் அதிகமாக இருந்த நாடும் இலங்கையாகும். தற்போதைய லொக்டவுனில் எவ்வித பயனும் இல்லை என்று கூறவில்லை. இறப்புக்களின் எண்ணிக்கை குறைவதற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால் விஞ்ஞானபூர்வமாக நடவடிக்கைகளைக் கையாளுமாறே வலியுறுத்துகின்றோம்.

நாட்டை 10 நாள்களுக்கு விஞ்ஞானபூர்வமாக முடக்குமாறு நாம் ஆலோசனை முன்வைத்தோம். எனினும், அது உரிய வகையில் செயற்படுத்தப்படவில்லை. உரிய முகாமைத்துவம் இல்லாததால்தான் முடக்கத்தை இவ்வாறு நீடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது போன்று லொக்டவுன் தொடருமானால் நாம் 10 நாள்களில் எதிர்ப்பார்த்த பெறுபேற்றை அடைவதற்கு, இன்னும் இரு மாதங்களாவது முடக்கல்நிலை தொடர வேண்டும். அதாவது லொக்டவுன் முறைமை குறித்து விரக்தியை ஏற்படுத்தி, நாட்டை மூடுமாறு வலியுறுத்திய மக்களை, அவர்களின் வாயாலேயே திறக்குமாறு வலியுறுத்துவதற்குத் தான் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர் முயற்சிக்கின்றனர். என்றார். (எ-4.44)

# "உள்ளாடை வாங்க சதொசவுக்கு வாங்கோ!"

### கூவி அழைக்கிறார் பந்துல

கொழும்பு, செப்.13

எதிர்காலத்தில் குறைந்த விலையில், சதொச ஊடாக உள்ளாடைகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போதுமான அளவு உள்ளாடைகள் கையிருப்பில் உள்ளன. எனவே அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. நாட்டில் தேவை ஏற்படும் எந்த ஒரு நபருக்கும், எந்த ஒரு தரத்திலும் உள்ளாடைகளை வழங்குவதற்கு வர்த்தக அமைச்சர் என்ற அடிப்படையில் நான் தயார்.

எனவே உள்ளாடைகள் அதிகம் கையிருப்பில் உள்ளன. இலங்கையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் இதுவரை உள்ளாடைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. எதிர்காலத்தில் சதொச ஊடாக உள்ளாடைகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதரப்பையும் விசாரிக்குமாறு தமிழ் அரசுக் கட்சி கூறியது ஏன்?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



யாழ்ப்பாணம், செப்.13

தருஸ்மன் குழு ஐ.நாவுக்கு வழங்கிய அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இருதரப்பு மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நடத்துவதா? அவ்வாறு நடத்துவதாயின் வேறு தரப்புகளையும் விசாரணை செய்யவேண்டுமா? என ஐ.நாவே முடிவெடுக்க வேண்டும். அவ்வாறிருக்கையில், ஐ.நாவில் தருஸ்மன் அறிக்கையில் சொல்லப்பட்ட, இறுதிப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு தொடர்பிலான குற்றங்களை விசாரிக்கவேண்டும் என்ற கருத்தை மட்டும் தமிழ் அரசுக் கட்சி தனது அறிக்கையில் உள்வாங்கி அனுப்பியது ஏன்?

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஐ.நா. விசாரணை ஆரம்பிக்கப்பட முன்னர் தருஸ்மன் வழங்கிய பரந்துபட்ட அறிக்கையிலிருந்து இரண்டு வரிகளை மட்டும் தமிழ் அரசுக்கட்சி தனது அறிக்கையில் குறிப்பிட்டமை ஏன்?

தாங்கள் அவ்வாறு அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடவில்லை என சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவிக்க, தமிழ் அரசுக் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன், தமிழ் அரசுக்கட்சி அனுப்பிய அறிக்கைக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கிளிநொச்சியில் ஊடக சந்திப்பை நடாத்திக் கூறியுள்ளார்.

இங்கு வேடிக்கை என்னவென்றால், இருவரும் தமிழ் அரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள். ஒருவர் அனுப்பவில்லை என்கிறார். மற்றையவர் அனுப்பியதற்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்கிறார்.

### சுமந்திரன் கூறும் குழப்பமான பதில்கள்

யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பை நடத்திய சுமந்திரன் பல மாறுபட்ட குழப்பகரமான பதில்களை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு இல்லை நாங்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம். சில ஊடகங்கள் மக்களுக்கு தவறான பரப்புரையை மேற்கொள்கின்றது என்று தெரிவித்திருந்தார்.

அவ்வாறாயின், தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த சிறீதரன் தமிழ் அரசுக்கட்சி அனுப்பிய ஆவணத்துக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறுவது எவ்வாறு? அதுமட்டுமல்லாது, சிறீதரன் மேலும் தெரிவிக்கும்போது, "நாங்கள் 9 பேர் கையெழுத்திட்டு ஆவணத்தைத் தயார் செய்தோம்.

ஆனால் சில காரணங்களால் அனுப்ப முடியவில்லை என்று பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளே இரண்டு அறிக்கைகள் தயார் செய்யப்பட்ட நிலையில் தாங்கள் ஒற்றுமையுடன்தான் இருக்கிறோம் என்று சுமந்திரன் கூறுவது எவ்வளவு தூரம் ஏற்புடையது என எண்ணத் தோன்றுகிறது.

ஆகவே மக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு தமிழ் அரசுக் கட்சி ஐ.நாவுக்கு அனுப்பிய கடிதத்தை அல்லது அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும். - என்று தெரிவித்தார். (த-20)

# சிறீதரனின் கருத்துத் தொடர்பில் அரசியல் குழுவில் ஆராய்வோம்!

## இப்படிச் சொல்கிறார் மாவை.



யாழ்ப்பாணம்,-செப்.13

விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்களையும் விசாரிக்குமாறு கோரும் வகையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடிதம் அமைந்திருந்தது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவில் ஆராயப்படும் என்று கட்சியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், சம்பந்தனால் அனுப்பப்பட்ட கடிதம் எனது மின் அஞ்சலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் அனுப்பப்பட்டிருந்தது. அதில் விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்களும் விசாரிக்கப்படவேண்டும் என்றிருந்தமையால் நாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை' என கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐ.நா.வுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் விடுதலைப் புலிகளையும் விசாரிக்க வேண்டும் என்று கோரப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

ஒரே கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுக்கொன்று முரணாகக் கருத்து வெளியிட்டுள்ளார்கள். யார் வெளியிட்ட தகவல் உண்மையானது என்று கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவைத் தொடர்புகொண்டு கேட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கருத்துத் தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை, அது தொடர்பில் நான் ஆராய்ந்துவிட்டுக் கூறுகிறேன். ஆனால் நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளை விசாரிக்கவேண்டும் என்று கோரவில்லை. இதுதான் உண்மை. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவ்வாறு கூறியிருந்தால் அது தொடர்பில் கட்சியின் அரசியல் குழுவில் ஆராயப்படும், எனத் தெரிவித்தார். (ஓ-214)

# வெளிநாட்டவர்களுக்கு மட்டும் மதுபானம் விற்க அனுமதி

கொழும்பு, செப்.13

இலங்கைக்கு வருகை தரும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரம், மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக தெரிவு செய்யப்பட்ட ஹொட்டல்கள் மற்றும் விசேட அனுமதிப் பத்திரம் உள்ள இடங்களில் மதுபானம் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஹொட்டல்கள் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக, திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டுள்ள விசேட மதுவரி உரிமங்களுடன் செயற்பட முடியும் என்று மதுவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். (ஏ-4)



# இலங்கைப் பாடகி படைத்த சாதனை

கொழும்பு, செப்.13

இலங்கைப் பாடகியான யொஹானி த சில்வாவால் அண்மையில் பாடப்பட்ட "மெனிகே மகே இத்தே" என்ற பாடல் 100 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்து சாதனை படைத்துள்ளது.

இலங்கை வரலாற்றில் யூ டியுப் வலைத்தளம் ஒன்றில் 100 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்த முதலாவது சந்தர்ப்பம் இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடல் முதன் முதலில் சிங்கள மொழியில் வெளிவந்தாலும் தற்போது தமிழ், ஹிந்தி என பல்வேறு மொழிகளில் பாடப்பட்டு வருகின்றது. இந்தப் பாடலை இந்தியர்களே அதிகளவில் யூடியுப் வலைத்தளத்தில் பார்வையிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# சமுர்த்தி உத்தியோகத்தர் கொரோனாத் தொற்றால் சாவு

கொழும்பு, செப்.13

புத்தளத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகயீனம் காரணமாக புத்தளம் தள மருத்துவமனையில் கடந்த 8 ஆம் திகதி சேர்க்கப்பட்ட அவர் பின்னர் உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கற்பிட்டி பெரியகுடியிருப்பைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ஏ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோத்தா ஆட்சியை நம்பி தவறிழைத்து விட்டோம்

## ஆனந்த தேரர் வருத்தம்

**கொழும்பு, செப்.13**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசை, ஆட்சிக்குக் கொண்டு வந்தமையானது, இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கிய கதைபோன்று ஆகிவிட்டது.**



என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


சுபீட்சத்தின் தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் நாடு நிர்வகிக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்து வந்தாலும், அது தொடர்பில் மக்கள் மத்தியில் திருப்தி, மகிழ்ச்சி இல்லை.

இந்த நாட்டுக்கு தேவ சாபம் ஏற்பட்டு விட்டதா என்று எமக்கு அழைப்பை ஏற்படுத்தும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெற்றிபெற்ற பின்னர் இந்த நாட்டுக்குச் சிறந்த தலைவர் கிடைத்து விட்டார் என்று மக்கள் கொண்டாடினர். ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. பலர் பதவி விலகுகின்றனர்.

மேலும் சிலர் வேடிக்கை பார்க்கின்றனர். மறுபுறத்தில் நாடு சீனாவின் கொலணியாக்கப்பட்டு வருகின்றது. ஆக சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதைபோலவே உள்ளது. -என்றார். (எ-4-44)

# தடுப்பூசி அட்டைகளை வைத்திருந்தவர் கைது



கொழும்பு, செப்.13

அனுமதியற்று 45க்கும் மேற்பட்ட கொரோனாத் தடுப்பூசி அட்டைகளைத் தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், காலி மாநகர சபையின் சமூக அபிவிருத்தி அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர், நாவின்ன உளுவிட்டிகே பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஜூலை மாதம் 28 ஆம் திகதி காலி மாநகர சபையில் நடைபெற்ற கொரோனாத் தடுப்பூசி தொடர்பான செயலமர்வில் இவர் பங்குபற்றியுள்ளார். குறித்த செயலமர்வின் பின்னர் வழங்கப்பட்ட தடுப்பூசி அட்டைகளை ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும் சந்தேகநபர் அவற்றை ஒப்படைக்காமல் தன்வசம் வைத்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-4)

# போராட்ட காலத்தில் வெளிநாடு ஓடியவர் அங்கஜன் இராமநாதன்

### ஜெனிவா விவகாரம் தொடர்பில் கதைக்க எந்த அருகதையுமில்லை என்கிறார் சுரேஷ்



யாழ்ப்பாணம்,செப். 13

இங்கு பல்வேறு இயக்கங்களும் தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடிய காலத்தில் தனது கல்வி நடவடிக்கைக்காக வெளிநாட்டுக்குச் சென்றவர்தான் அங்கஜன். தமிழ் மக்களின் ஜெனிவா விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கு அவருக்கு எந்த அருகதையும் இல்லை. இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஐ.நா.வுக்கு கடிதம் அனுப்புவது நாடகம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் பதிலளிக்கையிலேயே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் தந்தையார் வியாபாரி. இவர்களுக்குத் தொலைக்காட்சி நிறுவனம், எரிபொருள் நிரப்பு நிலையம் என்று பல்வேறு தொழில் நிறுவனங்கள் இன்று காணப்படுகின்றன. இவர்களுக்குத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், ஜெனிவா தொடர்பாகவும் பேசுவதற்கு எந்த அருகதையுமில்லை. அதைப்பற்றி இவர்கள் பேச முற்படுவதே நகைப்புக்கிடமானது.

நாட்டில் போர் முடிவுக்கு வந்த பின்னர் அரசியலுக்குள் வந்தவர்தான் அங்கஜன் இராமநாதன். அவர் அன்றிலிருந்து இன்று வரை ஆட்சியாளர்களுடன், அரசுடன் இணைந்தே செயற்பட்டு வருகின்றார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல இளைஞர்களை ஏமாற்றித்தான் அவர் வெற்றி பெற்றார். இது எல்லோருக்கும் தெரியும். -என்றார். (ஒ-125)

# தென்னிலங்கையில் கடல் சீற்றம் அதிகம்

## கரையோர மக்கள் அச்சம்

கொழும்பு, செப்.13

கொழும்பு முதல் காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரப் பகுதிகளில், கடல் அலையின் சீற்றம் சற்று அதிகரித்துக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கடல் அலை சுமார் 2 முதல் 2.5 மீற்றர் வரை உயரக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சீற்றம் பெறும் கடல் அலையானது, கரைக்குள் வரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. எனவே கடல்சார் தொழில்களில் ஈடுபடுவோர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

அதேவேளை அங்குலானைப் பகுதியில் சுனாமி ஏற்பட்டுள்ளது என்று பரவி வரும் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-4)



# முல்லை. மருத்துவமனைக்கு குருதி சுத்திகரிப்பு இயந்திரம்

## மட்டக்குளி லயன்ஸ் கழகம் அன்பளிப்பு

முல்லைத்தீவு, செப். 13

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு 16 லட்சம் ரூபா பெறுமதியான குருதி சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. மோதர மட்டக்குளி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் குறித்த இயந்திரம் நேற்று வழங்கப்பட்டது.

கனடாவில் வசிக்கும் மருத்துவர் கந்தையா விஜயலக்சுமி விஜயகாந்தன் குடும்பத்தின் நிதிப்பங்களிப்பில் ரங்கநாதனின் ஒழுங்கமைப்பில் குறித்த இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்குளி லயன்ஸ் கழகத்தின் தலைவர்கள், முக்கிய உறுப்பினர்கள் உள்ளிட்ட வடக்கின் லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (த-19)

# உடுப்பிட்டியில் வீட்டுக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், செப்.13

பொருண்மியம் குறைந்த குடும்பங்களுக்கு வீடமைத்து வழங்கும் திட்டத்தில் உடுப்பிட்டியில், ஒரு வீட்டுக்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.

யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியின் ஆலோசனைக்கும் வழிகாட்டுதலுக்கும் அமைவாக, 551 ஆவது காலாட்படைப் படையணியின் மேற்பார்வையில் 4 ஆவது சிங்க ரெஜிமென்ட் வீரர்களின் சரீர உழைப்பில் வீடு கட்டப்படவுள்ளது.

குறித்த படையணியின் படைத் தளபதி பிரிகேடியர் சிந்தக விக்கிரமசிங்க அடிக்கல் நட்டார். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் கவலை இருக்காது. தாமதித்த விடயங்கள் தடையின்றி நடைபெறும் நாள் அலுவலகத்தில் பிறருடைய தலையீடின்றி இயங்க விரும்புவீர்கள்.

**இடபம்:** நிதி விடயங்கள் திருப்தி தரும். பெருமிதம் அதிகரிக்கும். மனக்குழப்பம் அகன்று நிம்மதி பெற நண்பர்கள் வழிகாட்டுவர். அனுகூலமான செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் ஒன்று அகலும். விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். திட்டம் ஒன்று நன்மை தரும். உறவினர் ஒத்துழைப்பர். பயணம் செல்வீர்கள்.

**கடகம்:** பணத்தேவை சற்று அதிகமானாலும் கவலை அளிக்காது. பிறரிடம் பக்குவமாகப் பேசி அனுசரித்து நன்மை பெறுவீர்கள். நண்பர்கள் நல்ல செய்தியைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

**சிம்மம்:** தடைப்பட்ட செயல் தானாக நடைபெறும் நாள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்பு கிடைக்கும். தொலைதூரத்திலிருந்து அனுகூலச்செய்தி ஒன்று வரும்.ஆடை, ஆபரணம் சேரும்.

**கன்னி:** சுபநிகழ்ச்சி காரணமாகக் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பதற்றம், அவசரமின்றி யோசித்துச் செயல்படவேண்டிய நாள். செலவு சற்று அதிகரிக்கக்கூடும்.

**துலாம்:** இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று குழம்புவீர்கள். முயற்சிகளில் தாமதம் ஏற்பட்டாலும் சாதகமாக இருக்கும். அருகில் உள்ளவர்களின் ஆதரவு முன்பைவிடக்கூடும்.

**விருச்சிகம்:** நினைத்தது நிறைவேறும் நாள். பொருள் ஒன்றை வாங்குவீர்கள். நிகழ்காலத் தேவைகளில் ஒன்று நிறைவேறும். உழைக்க வேண்டியிருக்கும்.

**தனுசு:** சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்வதால் மனநிறைவு ஏற்படும். சமீபத்தில் சந்தித்த ஒருவரின் செயலால் சந்தோஷம் கிட்டும்.

**மகரம்:** வருங்கால கனவுகளை நனவாக்க புதுமுயற்சி எடுப்பீர்கள். விலகிச் சென்ற ஒருவரால் திடீர் நன்மை ஏற்படும். உங்களின் புகழ் அதிகரிக்கும். பேச்சினால் நன்மை வரும்.

**கும்பம்:** விலகிய பணியிலிருந்து மீண்டும் அழைப்பு வரக்கூடும். மறதியால் செய்யத் தவறிய விடயத்தை இன்று செய்து முடிப்பீர்கள்.

**மீனம்:** வாழ்வில் முன்னேறுவதற்கு இருந்த போட்டி அகலும். செலவு ஏற்பட்டாலும் அதன் மூலம் சந்தோஷம் கூடும். பரபரப்பாக செயலாற்ற வேண்டி வரும். கவனமாக இருங்கள்.

## twitter

**ச ப் பா ணி @manipmp**
கடிதங்களின் வருகை குறைந்தது போலத்தான், வாட்ஸ் அப் வந்த பிறகு..எஸ்.எம்.எஸ் களின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது

**கடைநிலை ஊழியன்@**
"பணம் பத்தும் செய்யும்" பழமொழி !!
"பணம் இல்லனா நம்மள வச்சு செய்யும்" புதுமொழி

**Md Noordeen@**
ஏமாறும் அளவிற்கு நல்லராக இருங்கள் மீண்டும் நம்பும் அளவிற்கு ஏமாளியாக இருக்காதீர்





# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

" நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன்
விசுவாசத்தை காத்துக்கொண்டேன்"



அன்னை மடியில் 20.07.1964 — ஆண்டவன் மடியில் 14.08.2021

கடந்த (14.08.2021) அன்று
கர்த்தருக்குள் மகிமை அடைந்த
எங்கள் அன்புச் சகோதரி

## அமரர் வனிதா பூவிலிங்கம்

**ஆசிரியை B.A.Dip.in Edu**

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
பழைய மாணவி, ஆசிரியை-அராலி
சரஸ்வதி வித்தியாலயம், இணுவில்
மத்திய கல்லூரி)

அப்பா அம்மா இல்லாத இடத்தை நீ நிறைத்தாய்
மதி அக்காவிடம் அவசரமாய் சென்றது ஏனோ?
மதி தனியே தவிப்பாள் என நினைத்தாயோ.

ஆயிரம் ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
றூபி அக்கா நீ இல்லையே அன்னத்தை யார் போடுவார்-உன்னைத் தவிர
எங்கள் கண்ணீரை யார் துடைப்பார் உன் கரங்கள் தான் இல்லையே?
இதயம் ரணமாய் துடிக்கின்றதே-அம்மா

பசிக்கு உணவாக, வலிக்கு ஆறுதலாக
உள்ளக் குமுறலுக்கு கடவுளாக எங்களை உள்ளம் கையில்
விழாதவாறு நீ காத்தாய் - இப்ப யாருமில்லையே
நமக்கு-தாயே யாருமேயில்லையே

எமக்கு வலித்தால் நீ துடிப்பாய், உனக்கு வலித்தால் மௌனமாய் சிரிப்பாய்
இப்ப எமக்கு யாரும் இல்லையே, நாம் என்ன செய்வதென்று
தவிக்கின்றோம் விடை சொல்லாமல் மௌனமாய் சென்றாயோ

தாங்காத வலிகளுடனும் தூங்காத விழிகளுடனும்
வற்றாத கண்ணீருடனும் பிரிந்து தவிக்கின்றோம்.
உன் சிரிப்பும் அன்பும் அக்கறையும்
நாம் சந்தோஷமாய் இருப்போம் என நினைத்து
உன் மன உறுதியுடன் மௌனித்து விட்டாயோ றூபி அக்கா


எம் குடும்பத்தின் பாசமலர் அமரர் வனிதா பூவிலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அந்தி நேரம் பாராது உடன் வந்த உறவினர், நண்பர்கள், தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறிய நல் உள்ளங்களுக்கும் துயர் பகிர்ந்த மருத்துவர்கள், சபை ஊழியர்கள் அருட் தந்தையர்கள், அதிபர் ஆசிரியர்களுக்கும் நன்றிகள்.
இறுதி ஆராதனைக்கான சகல ஒழுங்குகள் உதவி ஒத்தாசை புரிந்த நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சகோதரிகள்.**
**பூவிலிங்கம் சந்திரவதனா**
**பூவிலிங்கம் ஜெயவதனி (விஜி)**
**றஜந்தன் குடும்பம் (பிரான்ஸ்)**

**85, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 7859**

# வெளியாகியது 'அண்ணாத்த' பட 'பெர்ஸ்ட் லுக்'

சிறுத்தை சிவா இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்து வரும் திரைப்படம் 'அண்ணாத்த'. கிராம பின்னணியைக் கொண்டு உருவாகி வரும் இந்தப் படத்தில் குஷ்பு, மீனா, நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், யோகிபாபு உள்ளிட்ட ஏராளமான திரை நட்சத்திரங்கள் நடித்து வருகின்றனர். இப்படத்துக்கு டி.இமான் இசையமைக்கிறார். வரும் நவம்பர் 4 ஆம் திகதி தீபாவளி பண்டிகையையொட்டி 'அண்ணாத்த' திரைப்படத்தை வெளியிட தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளது. இந்நிலையில், அண்ணாத்த படத்தின் பெர்ஸ்ட் லுக் போஸ்டரை விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வெளியிட்டுள்ளனர். வேஷ்டி சட்டையுடன் ரஜினி நிற்கும் 'அண்ணாத்த' படத்தின் போஸ்டர் ரசிகர்களைக் கவர்ந்து இணையத்தில் வைரலாகி வருகிறது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களுக்காக ஐ.நாவை நாடத் தயார்!

## தமிழ் முற்போக்குக் கூட்டணி அறிவிப்பு

**கொழும்பு, செப்.13**

**மலையகத் தமிழர்களின் வாழ்வியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்காக அனைத்து வழிகளிலும் நாம் போராடுவோம். இதற்கு சர்வதேச தலையீடு அவசியமெனில் ஐ.நா. உள்ளிட்ட அதன் கிளை அமைப்புகளை நாடுவதற்கும் தயாராக இருக்கின்றோம்.**



என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையகத் தமிழர்கள் அன்று முதல் இன்றுவரை திட்டமிட்ட அடிப்படையில் வஞ்சிக்கப்படுகின்றனர். சாதாரண மனிதனொருவனுக்குக் கட்டாயம் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகள் கூட எமது மக்களுக்குக் காலம் கடந்தே கிடைத்த போதும் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்த நிலைமையை மாற்றியமைத்து நல்லாட்சியின் போது குறுகிய நான்கரை வருடங்கள் காலப்பகுதிக்குள் முக்கியமான சில விடயங்களை நாம் நிறைவேற்றினோம்.

குறிப்பாகப் பெருந்தோட்டப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களை முன்னோக்கி அழைத்துச் செல்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

ஆனால் பெருந்தோட்ட மக்களை பின்னோக்கிக் கொண்டு செல்வதற்கான நகர்வுகள் தற்போதைய ஆட்சியின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய காணி உரிமையை வெளியாருக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எமது மக்களைத் தொடர்ந்தும் நாட்கூலிகளாக வைத்திருக்கவும், உரிமைகளை மறுப்பதற்கான வியூகமும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

எனவே, இவற்றை முறியடிப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியினராகிய நாம் ஐக்கிய மக்கள் சக்தியாக அனைத்து வழிகளிலும் போராடுவோம். என்றார். (எ-4-44)

# குடிதண்ணீர் கட்டணத்தை செலுத்த கோரிக்கை

வவுனியா, செப். 13

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்திய வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்களது மாதாந்த நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் ஏற்கனவேயுள்ள நீர்ப்பட்டியல் நிலுவைகளைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நீர்வழங்கல் சபையானது மக்களுக்கான குடிதண்ணீரை வழங்கும் பொருட்டு உற்பத்திச் செலவாக பெரும் தொகையை முதலிட்டு வருகின்றது. நீர்வழங்கலைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பெருந்தொகை நிதி தேவைப்படுகின்றது. எனவே, பயனாளிகள் அனைவரும் காலக்கிரமத்தில் தங்களது நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் நீர்ப்பட்டியல் நிலுவைகளைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தற்போதைய கொரோனாப் பேரிடர் காலத்தில் நீர்ப்பட்டியல் செலுத்துவதற்காக வரிசையில் நின்று உங்களது பாதுகாப்புக்கு தீங்கேற்படாதவாறு, வீட்டில் இருந்தவாறே ஒன்லைன் மூலமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஸ்மார்ட் சோன் (Smart Zone waterboard.lk) என்ற இணையத்தளம் மூலமாக மற்றும் ஒன்லைன் மூலமாக, வங்கிகள், ஒன்லைன் மூலமான தொலைத்தொடர்பு சேவைகள், மற்றும் ஒன்லைன் மூலமான அரச, தனியார் சேவை வழங்குநர்கள் மூலமாகவும் உங்களது கொடுப்பனவுகளைச் செலுத்திக்கொள்ள முடியும்.

அத்துடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா, யாழ்ப்பாண காரியாலய காசாளர் பிரிவிலும் தங்களுக்கான கொடுப்பனவுகளை வழமைபோன்று மேற்கொள்ள முடியும் என்று சபையினர் தெரிவித்துள்ளனர். (து-110)

# தடுப்பூசி ஏற்றிய 100 வயது மூதாட்டி



வவுனியா, செப்.13

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் 100 வயதுடைய பெண் ஒருவர், நடமாடும் மருத்துவ சேவையினர் மூலம் முதலாவது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளார். நாட்டில் கொரோனாத்தொற்று அதிகரித்துவரும் நிலையில் அனைத்து மக்களும் தடுப்பூசியைப் பெற்றுவருகின்றனர். சிலர் அச்சம் காரணமாக தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முன்வராதநிலையில், 100 வயதுடைய அந்தப் பெண் தடுப்பூசி பெற்றுள்ளார். நெடுங்கேணி, மருதோடைக்கிராமத்தில் வசிக்கும் அவர், கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள விரும்புகின்றேன் என்று கூறியதற்கிணங்க முதலாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளார். (து-110)

# கடந்த 11 நாள்களில் கொரோனா சாவு 63



## வவுனியாவில் தொற்று தீவிரம்

வவுனியா, செப். 13

வவுனியா மாவட்டத்தில் இந்தமாதம் 11 ஆம் திகதிவரை ஆயிரத்து 651 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 63 பேர் கொரோனாச் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்படும் கொரோனா இறப்பு வீதத்தில் வவுனியாவில் உயிரிழப்போரின் தொகை பெருமளவில் காணப்படுகின்றது. வவுனியாவில் மக்கள் அசமந்தமாகச் செயற்படுவதால் உயிரிழப்புத் தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது.

எனினும், மக்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பெரும் ஆபத்தான நிலைப்பாடாக உள்ளது.

வவுனியா மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் சிந்தித்து. சுகாதார நடைமுறைகளை கட்டாயமாகப் பின்பற்றிச் செயற்படவேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்துகின்றனர். (து-110)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வடக்கில் தொழிற்சங்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 13

வடக்கு மாகாணத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான புதிய தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றிவரும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கானதாக இந்தத் தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது 'இலங்கை அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம் வடக்கு மாகாணம்' எனும் பெயரில் தொழிற்சங்கமாக தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவராக செ.செல்வானந்தம், செயலாளராக சி.பிரேமகுமார், பொருளாளராக சி.சுரேந்திரன், உபதலைவராக பா.தியோஜினஸ் மற்றும் உபசெயலாளராக அ.குகன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 9 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபையின் கீழ் இந்தத் தொழிற்சங்கம் செயற்பட ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வடக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றிவரும் அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எதிர்கொண்டுவரும் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு விரைந்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைப் பகிர்வு, வருடாந்த இடமாற்றங்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் நலன் சார்ந்த விடயங்களும் எவ்வித பாகுபாடுமின்றித் தீர்வுகளை எட்டக்கூடியதாக அமையும்.

மேலும் வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட காலம் முதல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுகள் உரிய காலங்களில் வழங்கப்படாமல் சுமார் 12 வருடங்களுக்கு மேலாக இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில், சேவைமூப்பு அடிப்படையிலான விசேட தரத்துக்கான பதவியுயர்வுகளை மிக விரைவாக நிரப்புவது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் திணைக்களங்களில் வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் உட்பட வடக்கு மாகாண சபைக்குட்பட்ட அனைத்துத் திணைக்களங்களுக்கும் கடிதமூலமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று சங்கம் தெரிவித்தது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷ்ணர் கோவிலில், கொரோனா நீங்க யாகம்

கிளிநொச்சி, செப். 13

கொடிய கொரோனாத் தொற்று நோயிலிருந்து விடுபட மாபெரும் யாக சாந்திப் பூசை கிளிநொச்சி கிருஷ்ணர் கோவிலில், நேற்று நடைபெற்றது. நேற்று முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை குறித்த யாகபூசை உரிய சுகாதார முறைப்படி நடைபெற்றது. (கு-6)

# சட்டம், நீதித்துறையின் தாமதத்தால் கைதிகளுக்கான தீர்வு தூரமாகிவிட்டது

*குரலற்றவர்களின் குரல் அமைப்பு சிறைக்கைதிகள் தினத்தில் சுட்டிக்காட்டு*

**யாழ்ப்பாணம், செப். 13**

**வளப்பற்றாக்குறைகளைக் கோடிட்டுக்காட்டிக்கொண்டிருக்கும் சட்டம் மற்றும் நீதித்துறை என்பனவற்றின் தாமதம் காரணமாக, கைதிகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது இன்னும் தூரமாகவே உள்ளது. எனவே, அரசியல் கைதிகளை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும், என்று சிறைக்கைதி கள் தினத்தில் கோரிக்கை விடுக்கின்றோம் என 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது நாட்டிலுள்ள 26 சிறைச்சாலைகளில் சுமார் 20ஆயிரத்து 228 கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். உண்மையில் நாட்டினுடைய சிறைக்கட்ட மைப்பின் பிரகாரம் சுமார் 12 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்துப் பராமரிக்க முடியும் என சிறைத்துறைத் தலைமையகம் தெரிவிக்கின்றது. நாட்டுக்குள் அன்றாடம் அதிகரித்துச்செல்கின்ற குற்றச் செயல்கள் காரணமாகவே சிறைக்கூடங்கள் நிரம்புகின்றன என்றுகூறிவிட்டு வெறுமனே ஒதுங்கிவிட முடியாது.

சட்டத்துறைக் காரியாலயத்திலும் நீதிமன்றங்களிலும் வழக்குக்கோவைகள் குவிந்து கிடக்கின்றன. வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுமென நீதி அமைச்சு தெரிவித்து வருகின்றபோதிலும் பெரும்பாலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீண்டகாலத் தவணை திகதியிடப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது. விசேடமாக இரண்டு தசாப்த காலங்களுக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக நீதிமன்ற நடவடிக்கைகள் சீரான முறையில் இயங்கமுடியாத நிலை தொடர்கிறது.

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் தமது சட்டத்தரணிகளைச் சந்தித்து வழக்கு விடயங்கள் தொடர்பில் பேசமுடியாதுள்ளது.

'ஸ்கைப்' தொழில்நுட்பத்தின் வழியே நீதிவானூடாக நீதிமன்ற வழக்குகள் இடம்பெற்று வருகின்றன. எனினும், பாதிக்கப்பட்ட தரப்பு நியாயங்களை நேரடியாக மன்றுக்கு எடுத்துக்கூறி முறையிடுவதில் இடையூறுகள் காணப்படுகின்றன.

நடைமுறையிலிருந்துவந்த 'தண்டனைக்கைதிகளுக்கான வீட்டு விடுப்பு' (Home leave) வழங்கும் செயற்பாடானது இடைநிறுத்தப்பட்டுள்ளது. பல்வேறு சமூக பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துவரும் தமது அன்புக்குரிய உறவுகளைப் பார்த்துப்பேசுவதற்குக் கைதிகளால் இயலாதுள்ளது.

ஊட்டச்சத்துடன் கூடிய போசாக்கான உணவு, போதுமான மருத்துவ வசதி மற்றும் அத்தியாவசியத்தேவைகளை ஈடுசெய்ய முடியாமல் கைதிகள் விரக்தியடைந்துள்ளார்கள்.

இவ்வாறான விடயங்களால் சிறைத்தடுப்பில் உள்ளவர்கள் இயல்புக்கு மாறான உடல், உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று கைதிகளின் பெற்றோர்கள், உறவினர்கள் கவலை கொண்டுள்ளனர்.

தொடர் மன அழுத்தமானது வன்முறை, போதைக்கு அடிமைப்படுதல், தற்கொலை எண்ணம் போன்ற விபரீத நிலைக்குக் கைதிகளை இட்டுச்செல்லும் அபாயம் ஏற்படலாம்.

'கைதிகளும் மனிதர்களே' என்பதற்கமைய அவர்களது வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் தலையாய கடமையாகிறது. என்பதை தேசிய சிறைக்கைதிகள் தினத்தில் நினைவூட்டுகின்றோம். - என்றுள்ளது. (கு-26)




**பிரபல நிறுவனமொன்றுக்கு சாரதி தேவை.**
**உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.**

தங்கிநின்று வேலை செய்யக்கூடியவர்களுக்கும், கொழும்பு நெடுஞ்சாலைகளுக்குப் பரிச்சயமானவர்களுக்கும் முன்னுரிமை

**தொடர்புக்கு 0767374444**

## மரண அறிவித்தல்



### அமரர் கமலாதேவி சண்முகரத்தினம்

**தோற்றம் 26.01.1944** **மறைவு 12.09.2021**

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கமலாதேவி சண்முகரத்தினம் அவர்கள் நேற்று (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (கிளாக்கர்) திருப்பதிப்பிள்ளை தம்பதியரின் மகளும், பொன்னம்பலம் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், ஓய்வுநிலை Dr.சண்முகரத்தினம் (ஓய்வுநிலை வைத்தியர்) அவர்களின் அன்புத் துணைவியாரும் அமரர்களான சூரியகுமாரன், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நளினி (நோர்வே), ஜெயமாலினி, ஜெயந்தினி (நோர்வே), Dr.பரமானந்தம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணானந்தன் (நோர்வே), சத்தியேந்திரன் (நியூபாமா ஹாட்வெயார் உரிமையாளர்), பகீரதன் (நோர்வே), Dr.அட்சரேஸ்வரி (பொது வைத்தியநிபுணர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அட்சயன், அபிசரன், அபிராமி, நிசான், ஆகார்ஷன், அபிசயன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்புகளுக்கு: மகன்-0777 043645**

## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து) - மூளாய்
## பதவி வெற்றிடங்கள்

எமது வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வைத்திய உத்தியோகத்தர். (SLMC Registration).
   (முழு நேரம்/பகுதி நேரம்). விடுதி வசதிகள் வழங்கப்படுவதுடன் சம்பளம் சுகாதார அமைச்சிற்கு நிகராக வழங்கப்படும்.
2. கணக்காளர் :
   தகமை :- (1) CIMA, AAT அல்லது பகுதியளவில் Chartered சித்தியெய்திருத்தல் மற்றும் 01 வருட அனுபவம்.
   அல்லது
   மேற்கூறப்பட்ட தகமைகளை பெறுவதற்கான பரீட்சையில் தோற்றி பெறுபேற்றிற்காக காத்திருத்தல் மற்றும் 02 வருட அனுபவம்.
   (2) Computerized Accounting Package இல் கடமையாற்றக் கூடியதாய் இருத்தல் கட்டாயமானது.
   (3) வயது 25 - 50.
   (4) சம்பளம் மற்றும் ஏனைய நன்மைகள், நிபந்தனைகள் பேசித் தீர்மானிக்கப்படும்.
3. மருத்துவ ஆய்வுகூட பயிலுனர்.
4. மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்.
5. மருந்தக உதவியாளர்.

விண்ணப்பத்தினை நேரிலோ பதிவுத் தபாலிலோ அல்லது வைத்தியசாலை மின்னஞ்சல் மூலமோ தங்களால் எதிர்பார்க்கப்படும் சம்பளத்தினை குறிப்பிட்டு அனுப்பி வைக்க முடியும்.

தலைவர்,
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து)
மூளாய், சுழிபுரம்.
e-mail : moolaii@yaoo.com

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 24 . 08 . 1936

மறைவு 12 . 09 . 2021

**கந்தசாமி தையல்நாயகி (அழகு)**

**குடும்பத்தினர்.**
**076 245 6244**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 15.09.2021 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 120.00 ரூபாவாக நிர்ணயம் செய்துள்ளது. பால் உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும்முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**பொது முகாமையாளர்**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**

## தவறிவிட்டது

கடந்த 07.09.2021 அன்று இலுப்பையடி சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில் இரத்தினராசா டினேஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (901602506V) வாகன சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய கைபேர்ஸ் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**077 942 7111**

# சுவிஸ் தூதரக அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்குக

## ஆயர் மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்து பின்னர் தற்காலிகமாக மூடப்பட்ட சுவிஸ் தூதரக அலுவலகத்தை மீண்டும் திறக்க ஆவன செய்யுங்கள் என்று இலங்கைக்கான சுவிஸ் தூதரிடம் வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் மறைமாவட்டங்களின் ஆயர்கள் கையொப்பமிட்டு இலங்கைக்கான சுவிஸ் தூதருக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்படி வேண்டுகொள் விடுக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் நிறைவுற்றபோதும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ள வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சர்வதேச நிறுவனங்கள், மனித உரிமை கண்காணிப்பாளர்கள், இராஜதந்திர அதிகாரிகளின் பிரசன்னம் மிகவும் அவசியமாக இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் சுவிஸ் தூதரகத்தினுடைய அலுவலகத்தின் பிரசன்னம் மிகவும் முக்கியமானது என்பதை ஆயர் மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளையில், கடந்த காலங்களில் சுவிஸ் அலுவலத்தின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளினால் இலங்கை நாடும் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களும் அடைந்த நன்மைகளுக்காக இந்தக் கடிதத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையைத் தமது பூர்வீகமாகக் கொண்டு தற்போது சுவிஸ் பிரஜைகளாக இருக்கின்றவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பலர் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வாழுகின்ற நிலையில் அவர்களது சமூக, கலாசார, பொருளாதார தேவைகளைக் கண்காணிக்க யாழ்ப்பாணத்தில் மீளத் திறக்கப்படும் சுவிஸ் தூதரக அலுவலகம் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ள வடக்கு கிழக்கு ஆயர் மன்றம், இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் விரைவில் மீளத் திறக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ம 22)



## 1ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
28 . 05 . 1955



ஆண்டவன் அடியில்
23 . 09 . 2020

**அமரர் செல்லையா செல்வரத்தினம்**

திதி: 13.09.2021

குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து
பெற்றோர்க்கு மூத்த புதல்வனாக விளங்கியே
சகோதரர்களையெல்லாம் சிகரம் தொடவைத்து
மனையாளுக்கு இனிய துணையாக இல்லறங் காத்து நின்று
அன்பு மகளுக்குச் செல்லத் தந்தையாகி
ஆசைமிகு மருமகனுக்கு பண்புமிகு மாமனாகி
மழலைமிகு பேரப்பிள்ளைகளுக்கு தங்கத் தாத்தாவாகி
பெறாமக்கட்செல்வங்களுக்கு கல்வியில் ஊக்கமளித்து
உற்றார், உறவினர்க்காய் உழைத்தவராய்
ஊர்போற்ற வாழ்ந்தீர்கள்!

குடும்பப் பாசப் பிணைப்பிலே கட்டுண்டு
சொந்த பந்தம்தேடும் உங்கள் கபடமில்லா உள்ளம்மீது
எல்லோருக்குமே பாசம் அதிகம்
ஆனால் காலனவன் அதிக பாசம் கொண்டதேனோ?
ஆண்டொன்று ஆனாலும் ஆறுமா? எங்கள் நெஞ்சம்!

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**
**-குடும்பத்தினர்-**

வைத்தியசாலை அருகாமை, கண்டாவளை,
0770041674
மனைவி திருமதி.செ.புவனேஸ்வரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
18 . 05 . 1940



மறைவு
14 . 08 . 2021

கடந்த 14.08.2021 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தசாமி சிவானந்தம்**

அவர்கள்

இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆறுதல் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், எமது இல்லத்துக்கு வருகை தந்தும், இறுதிக் கிரியை, இறுதி ஊர்வலம் என்பவற்றில் கலந்துகொண்டும், தொலைபேசி வேறு வகையிலும் தமது அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**ஐயாத்துரை-சண்முகானந்தம்**

**(ஓய்வுபெற்ற சாலை முகாமையாளர், இலங்கை போக்குவரத்து சபை)**

கோப்பாய் தெற்கு கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சண்முகானந்தம் அவர்கள் கடந்த (03.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கட்டப்பிராய் ஐயாத்துரை (ஓய்வுபெற்ற நேரக் கணிப்பாளர் இ.போ.ச) இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், செல்வேந்திரராணியின் அன்புக் கணவரும், Lion சீமாட்டி இலட்சுமிகாந்தன்-தங்கமணி (கட்டப்பிராய்) பரமானந்தம் (அமெரிக்கா), ஈஸ்வரானந்தம் (கனடா), நவநீதராசா (ஜேர்மன்), ரவீந்திரகுமார் (டென்மார்க்), ஸ்ரீகாந்தன் (சுவிஸ்), ஜெயராஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதாகரன் (கனடா), பகீரதரன் (கனடா), சுதர்சினி (கனடா), தாட்ஷாயினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லயன் சின்னத்துரை இலட்சுமிகாந்தனின் (கட்டப்பிராய்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு நேற்று (12.09.2021) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலைமணி வீதி,**
**கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**சி.இலட்சுமிகாந்தன்**

## மரண அறிவித்தல்

தாய் மடியில்
02 . 09 . 1949



பரன் அடியில்
09 . 09 . 2021

**திரு.இராஜரத்தினம் ஸ்ரீபாலரத்தினம்**

**(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்)**

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் 58, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராஜரத்தினம் ஸ்ரீபாலரத்தினம் அவர்கள் கடந்த 09.09.2021 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கென்றி இராஜரத்தினம்-ஜீவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான C.A. குலசிங்கம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஆன் நந்தினியின் பாசமிகு கணவரும், Dr.S.G.கிஷோலோஜன் (பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம், நாவின்ன), S.A.வினோத் (முகாமையாளர், இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம்-கொழும்பு) மற்றும் S.W.நிஷ்ஜெயந் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.மநுமதி (உள்நாட்டு மருத்துவ திணைக்களம், கொழும்பு மாநகர சபை), சுகன்ஜா (உரிமையாளர் ESSAR Associates, கொழும்பு), பிறிஸில்லா (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிஷேக் (St.Thomas' College, Mt.Lavania), நோவா (UK) ஆகியோரின் அன்பு பேரனும், தேவராஜன்-அஜந்தினி (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 10.09.2021 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.இல:077 5051054**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் இருவர் கொரோனாவால் பலி!

வவுனியா, செப். 13

வவுனியாவில் நேற்று இருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு முன்னெடுத்த பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே அவர்கள் இருவரும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தனர். (ம110)


## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகவும் தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றும்

**திரு. தர்மகுலசிங்கம் பானுமகேந்திரா**

அவர்களின் அன்புத் தந்தை

**சிவசாமி தர்மகுலசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் பொ.பஞ்சலிங்கம்**

**(முன்னாள் உப தலைவர் யாழ் ப.நோ.கூ.சங்கம்)**

மாதமொன்று கடந்திட்டாலும், மனதை விட்டு அகன்றிடாத
காதமொன்றைக் கணத்தினிலே கடந்துவிட்ட சாதனையாளர்,
காலமதன் கணக்கினிலே காற்றில் நீ கரைந்திடினும்
ஞாலமுள்ள நாள் வரையும் நம் ஞாபகத்தில் நீயிருப்பாய்
பல்துறையில் கால்பதித்து, வாழ்வாங்கு வாழ்ந்து வந்து
கூட்டுறவில் உள் நுழைந்து உப தலையாய் உயர்ந்துவந்த
நண்பனே, திரிலிங்கத்தில் ஒருவனாகி ஊர்ப்பெருமை பெற்றவனே
அமைதியைச் சுற்றம் பெற, சாந்தியை நீ அடைய
இறைவனை வேண்டுகிறோம், அமைதியாய் உறங்குவாய்.

**ஏ.எஸ்.சத்தியதாசன்.** **உப தலைவர் யாழ். ப.நோ.கூ சங்கம்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 09 . 1934



இறப்பு 12 . 09 . 2021

**பொன்னம்மா சிவசுப்பிரமணியம்**

தாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா சிவசுப்ரமணியம் நேற்று (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு சிவசுப்ரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கத்தின் சகோதரியும், திருக்கேதீஸ்வரன், திருக்கேதீஸ்வரி, சிவனேஸ்வரி, சிவனேஸ்வரன், கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலதி, சாந்தகுமார், சந்திரபாலன், கேசினி, ரவீந்திரன் ஆகியோரின் மாமியும், பிரியங்கா - குகனேஸ்வரன், லக்சுவினி-கோகுலன், ஹம்சாயினி, மயூரன்-அபிதா, சஞ்சீவன், குகாஜினி, விதுஷன், வித்தியா, மாயோன், கஜானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தியானி, ஸ்ரீசயின், வெண்பா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 08 . 1954



இறப்பு 12 . 09 . 2021

**துரைசாமி சுப்பிரமணியம் (சுப்பு)**

**(வேணி வெல்டிங் உரிமையாளர்)**

மன்னார் பெரியகடையை பிறப்பிடமாகவும், மன்னார் பெற்றாவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசாமி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசாமி புஸ்பம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற சண்முகவேல், பத்மாவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கிருஷ்ணவேணியின் பாசமிகு கணவரும், சுஜித்திரனின் பாசமிகு தந்தையும், மிதுஷாவின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுஜித்திரன் (மகன்)-0775533915 மன்னார்**
**வாணி (மச்சாள்)-0779204176 யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**பரமேஸ்வரி குமாரவேலு (பராமிஸ்)**

**சென் மேரிஸ் வித்தியாலயம் (OLR)**

யாழ் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி குமாரவேலு (பராமிஸ்) கடந்த (11.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு-லட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், பரமலிங்கம் / கண்ணன் (கனடா), ரங்கநாயகி, திலகவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), நிர்மலா (விடுதிக் காப்பாளர்), காலஞ்சென்றவர்களான சுவர்ணலிங்கம் / ரங்கன், செந்தமிழ் செல்வி, வைகுந்தவாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr.சுரேணுகா (USA), ஸ்ரீநிகேதன் (கடல்துறை அமைச்சு) Dr.லவன் (Agastyaa Naturals & IHTC) ஆகியோரின் பெரிய தாயாரும், பிரசாந்தன், ஆரணி (கனடா) ஆகியோரின் பாசமிகு அத்தையும், அகிலன் (பொறியியலாளர் USA), மயூரி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புக்கு: 077 4879 116**
**077 9124 047**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**கணபதி சின்னத்தம்பி**

ஆவரங்கால் மேற்கு சர்வோதயா வீதியை பிறப்பிடமாகவும் ஆவரங்கால் கிழக்கு புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னத்தம்பி நேற்று (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருமையர் பத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சிற்றம்பலம், பூரணம், மயிலு மற்றும் லட்சுமி கார்த்திகேயன், கற்கண்டு, குண்டுமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம், சந்தனாதேவி, கலைச்செல்வன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரா, லோகராஜா, தபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.09.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 902 6483**


# உள்ளூரில் மணல் விலை அதிகரித்தமை எதற்காக?

அதிகாரிகளைத் தலையிடுமாறு வீடு கட்டுவோர் கோரிக்கை

கிளிநொச்சி, செப். 13

உள்ளூர் தேவைக்கு மணலைப் பெறுவதுகூட பெரும் இடர்பாடாகியுள்ளது. தவிர, ஓர் உழவியந்திர மணலின் விலை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதனால் உள்ளூர்வாசிகளான தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் விலையைக் குறைக்க அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் தமது வீட்டுத் தேவைகருதி ஒரு கியூப் மணலைக்கூடப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. தமது கிராமங்களிலிருந்து 2 கிலோமீற்றர் அல்லது 3 கிலோமீற்றர் தூரமளவில் மணல் உள்ளபோதிலும் மணலைப் பெறமுடியாதுள்ளது. மணலைப் பெறக்கூடியதாக இருந்தாலும், ஓர் உழவியந்திர மணல் சில நாள்களுக்கு முன்னர் வரை 6 ஆயிரம் ரூபாவாக இருந்தநிலையில், தற்போது 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அத்தியாவசியப்பொருள்களின் விலை அதிகரிப்பதென்றால், மணல் விலையை ஏன் அதிகரிக்க வேண்டும்? வெளிமாவட்டங்களுக்கு மணல் கொண்டுசெல்லப்படுகின்றது. ஆனால் உள்ளூரில் மணலைப் பெறமுடியவில்லை. பலர் அதிக விலைகொடுத்தே மணலைப் பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே, மணலுக்கு உரிய விலையை அதிகாரிகள் வரையறை செய்யவேண்டும். உள்ளூரில் மணலைப்பெற்றுத் தமது வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (த-113)

# கபடி வீராங்கனைகளுக்கு பொருள்கள் அன்பளிப்பு!

கிளிநொச்சி, செப். 13

இலங்கையின் தேசிய கபடி அணிக்குத் தெரிவான கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் மூவருக்கும் கபடி பயிற்சிக்குரிய உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் திறமையாக விளையாடிய கிளிநொச்சி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக வீராங்கனைகள் மூவரும், கடந்த மாதம் நடைபெற்ற தேசிய அணிக்கான தெரிவின்போது கபடி அணிக்கு உள்வாங்கப்பட்டிருந்தனர். இவர்கள் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆசிய கபடிப் போட்டியில் பங்குபற்றுவதற்காக சீனாவுக்குப் பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமிர்தநாதர் அகஸ்ரீன்

### (சம்மாட்டி)

**பிறப்பு** **இறப்பு**

**12.12.1939** **11.09.2021**

யாழ்ப்பாணம் மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.120, 2ம் குறுக்கு வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் அகஸ்ரீன் கடந்த (11.09.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லோப்பு அமிர்தநாதர்-றோசம்மா தம்பதியரின் மூத்த மகனும், அமலசீலி (றஞ்சிதம்) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மத்தியாஸ்-றீற்றம்மா தம்பதியரின் மருமகனும், செல்வசிங்கம் (பெரியராசா), செல்வநாயகம் (சின்ன ராசா), யூலிற்றா, நசரேத்தம்மா, இம்மனுவல் (பியதாஸ்-கனடா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர், யோண் பின்ரன் ஆகியோரின் மைத்துனரும், இவாஞ்சலின், எவிற்சின் மெரிசில்டா (வனசா), றஞ்சி (கனடா), மகேந்திரன், துரைரட்ணம், ஜெயரட்ணம், காலஞ் சென்ற டில்லிக்குமார், தேவதாஸ், இந்திரா, செல்வ ராணி, செல்வராஜா, கமலா, விஜிதா, விக்ரோறியா ஆகியோரின் மைத்துனரும், அருள்ராஜ் (உதயன்-பிரான்ஸ்), அமல்ராஜ் (சந்திரன்-இத்தாலி), அழகராஜ் (சுகு), அலின்றாஜ் (சசி-கனடா), அலிக்ஸ்மலா (கியூபா), அனுராஜ் (கிசோக்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், குயின்அனஸ்ரி (சித்திரா-பிரான்ஸ்), ஆன்லியூலின் (வீஜினி-பிரான்ஸ்), சர்மிலா (றூபிகா-கனடா), நிஷாந்தன் ஆகியோரின் மாமனாரும் செரோன், அபிஷா, அஸ்மி, அஸ்வினி, ஆகாஸ், லக்சித், கிஷா, றஷா ஆகியோரின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:**
0777122686 / +393270898408/
+33610235858 / 0012892186634

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி ஈவ்லின் ஸ்வீட்டா சுந்தரராணி (ராணி டீச்சர்)

புலோலியை பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் சாம்பியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஈவ்லின் ஸ்வீட்டா சுந்தரராணி (ராணி டீச்சர்) அவர்கள் 11.09.2021 சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.


அன்னார் காலம்சென்ற ஞானமுத்து, இரத்தினம் தம்பதிகளின் புதல்வியும், காலம்சென்ற கனகசூரியர் இராஜசூரியர், அலிஸ் தம்பதிகளின் மருமகளும், காலம் சென்ற ஐசக் கனகராயர் இராஜசூரியர் அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற பிரேமலதா மற்றும் பிரேமரூபினி, பிரேமமாலினி, பிரேம்னிஷா, பிரமிளா மற்றும் பிரேம்குமார் ஆகியோரின் அன்புத்தாயாரும், செந்திநாதன், அன்டன், துதிராஜ், பெர்னாண்டோ, வொரன், பிலோமினா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரெபேக்கா, கிருபன், ஐசக், அன்ட்ரு, இவாஞ்ஜலா, கெர்சோம், டெபோரா, சுஜித், திமோத்தி, சமி, ஜோயல், ஜெமைமா, ஜனேட், ஜோசப், ஹோப், ஈடன், ஜோசையா, கேலெப், விஜோஜன், றொமேலா, ஜெபசீலன், அஞ்சலின், நட்டாலி, டானியேலா, நட்டாலியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கெற்றுறா, கேரன், டேவிட், டிஷான், டிவினா, நட்டன்யா, நிரேயா, ஐசாயா, நேத்தன், ஜெரமாயா, சேராய், செரீனா, ஜஸ்மின், ரேச்சல், ஜான், ஷாட்ராக், எலியட், ஏப்ரஹம் ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் சத்தியரஞ்சிதம், சரோஜினிதேவி, காலஞ்சென்ற சத்தியஞானன், மற்றும் சத்தியபூபதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 12.09.2021 கிற்வே சாம்பியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.** **077 921 5550**

## மரண அறிவித்தல்



**மண்ணில் 20.09.1936** **விண்ணில் 11.09.2021**

### சாமுவேல் தேவபாலன் அழகையா

**(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)**

அளவெட்டியை பிறப்பிடமாகவும் இல.651, நாவலர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் தேவபாலன் அழகையா கடந்த 11.09.2021 சனிக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 604 3042**
**077 662 1660**

## மரண அறிவித்தல்

**அன்னை மடியில் 24 . 04 . 1949**



**ஆண்டவன் அடியில் 09 . 09 . 2021**

### திரு. கதிர்காமு பொன்னுத்துரை

**(ஓய்வுநிலை கணக்காளர்/லிகிதர்-கல்வித் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாணம்)**

யாழ் உசன் மிருசுவிலை பிறப்பிடமாகவும் அளவெட்டியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொழும்பு மற்றும் திருகோணமலையை தற்காலிக வசிப்பிடங்களாகவும் கொண்ட திரு பொன்னுத்துரை கதிர்காமு அவர்கள் 09.09.2021 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், செல்லக்கண்டு லக்ஸ்மி தம்பதிகளின் அன்பு மருமகனும், லில்லிமலர் அவர்களின் பாசமிகு கணவனும், சோபிதா (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களம் – வடமாகாணம்), அமல்ராஜ் (பிரான்ஸ்) ஆகியோரது பாசமிகு தந்தையும், மார்க்கஸ் சேவியர் (SRM/Hemas Pvt Ltd, Trincomalee) அவர்களின் அன்புமிகு மாமானாரும், ஷாருக்சன், சுபிக்சன் ஆகியோரது பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்க ளான கந்தையா, தவமணி, மற்றும் பரமேஸ்வரி(பிரான்ஸ்), திருஞானமூர்த்தி (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்) ஆகியோரது அன்புச் சகோதரரும், ஜெயானந்தம் (பிரான்ஸ்), ஜெயராஜா (பிரான்ஸ்), ஜெயநாதன் (பிரான்ஸ்), பாக்கிய நாதன் (பிரான்ஸ்), ஜெயறஜனி, சிவரத்தினம், சிதம்பரப்பிள்ளை (அவுஸ்திரேலியா), புலேந்திரன் (பிரான்ஸ்), இந்திராணி(பிரான்ஸ்), ராசநந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மாகலக்ஸ்மி (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்), தெய்வநாயகி (பிரான்ஸ்), ஜெயராணி (பிரான்ஸ்), அருள்நேசராஜா அவர்களின் அன்புச் சகலனுமாவார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, அன்னாரின் இறுதிக் கிரியைகள் குடும்ப உறுப்பினர்களுடன் நடைபெற்று பூதவுடல் 14.09.2021 செவ்வாய்க்கிழமை அன்று பி.ப 06:00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்பு: 077 2376751**
**077 350 1371**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**பிறப்பு 15 . 01 . 1941**



**இறப்பு 07 . 09 . 2021**

### சின்னத்தம்பி சரஸ்வதி

யாழ்ப்பாணம், புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கரம்பைக் குறிச்சி வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சரஸ்வதி அவர்கள் கடந்த (07.09.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராணி (ஓய்வுநிலை ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), நீலாம்பிகை (ஆசிரியை, யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), காலஞ்சென்ற ஞானாம்பிகை, மோகனாம் பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலரத்தினம், யோகேஸ்வரி, கமலாதேவி, சிவகாமி, பாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விஜயராணி, தியாகேசு, கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை சாரதி, இலங்கை போக்குவரத்துச் சபை), முதலிக்குட்டி (ஓய்வு நிலை ஆசிரியர், யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம்), பரமேஸ்வரி (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மைத்துனியும், நகுலேஸ்வரன் (ஓய்வுநிலை ஆய்வுக்கூட உதவியாளர், யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஜெயக்குமார் (அலுவலக உதவியாளர் யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), ஜெயரூபன் ஆகியோரின அன்பு மாமியாரும், கவிப்பிரியா (ATI யாழ்ப்பாணம்), சங்கீதன் (மென்பொறியியலாளர்-கொழும்பு), கானப்பிரியா (மாணவி - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்), சைந்தவி (மாணவி, ATI யாழ்ப்பாணம்), சாரங்கி (மாணவி, மொறட்டுவ பல்கலைக்கழகம்), சாகித்தியன் (மாணவன்,யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), லதாங்கன் (மாணவன், யா/வரணி மத்திய கல்லூரி), லாவண்ணியன் (மாணவன், யா/வரணி மத்திய கல்லூரி), லதர்ணன் (மாணவன், யா/வரணி மத்திய கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.09.2021 செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மன்றத்தில் அரசின் தலைவிதி!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13
துரதிர்ஷ்டவசமான நிலைமையிலிருந்து மக்களை மீட்கும் பொறுப்பை அரசு ஏற்காவிட்டால், மக்கள் நீதிமன்றத்தில் அரசின் தலைவிதி தீர்மானிக்கப்படுவதைத் தடுக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
'மக்கள் நீதிமன்றத்தில் அரசின் விதி தீர்மானிக்கப்படும்' எனும் தலைப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.
தான்தோன்றித் தனமான, தூரநோக்கற்ற, பொறுப்பற்ற ஆட்சி காரணமாக கொரோனாத் தொற்றால் வேறெந்த நாடும் வீழ்ச்சியடையாத அளவுக்கு வங்குரோத்து நிலையை இலங்கை அடைந்துள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.
அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
'தமது அரசியல் மற்றும் சுயநலவாத நிகழ்ச்சி நிரலுடனான சூதாட்டத்துக்கு மக்களின் வாழ்க்கையை அரசு பயன்படுத்துகின்றது. இந்தத் துயரத்தை நாட்டின் அடுத்த தலைமுறைகூட எதிர்நோக்க நேரிடும் என்பதை அரசு நினைவில்கொள்ள வேண்டும். மூன்று வேளைகள் அன்றி ஒரு வேளையேனும் போஷாக்கான உணவைப் பெறமுடியாத அளவுக்கு மக்கள் நிர்க்கதியாகியுள்ள நிலையில், அரசின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூன்று வேளை உணவை இரண்டு வேளை, அல்லது ஒரு வேளையாக மட்டுப்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கும் அளவுக்கு 'அரசின் சுபீட்சம்' பெருக்கெடுத்துள்ளது.
தாங்க முடியாத அளவுக்குப் பொருள்களின் விலை அதிகரித்துள்ள நிலையில், பஞ்சம் நிறைந்த நாடு மற்றும் வரிசையில் நிற்கும் யுகம் உருவாகி வருகின்றது. பிரச்சினை ஏற்படும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அரசு பதவிகளில் மாற்றத்தைச் செய்கின்றதே ஒழிய, ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்லை. பொருளாதார அலகுகளை முறையாக முகாமைத்துவம் செய்து, நாட்டு மக்களுக்கு நிதி ரீதியிலான உந்துசக்தியை அரசு காலம் தாழ்த்தாது வழங்க வேண்டும்' என்றுள்ளது. (ம-22)

---

### கொரோனா....
னர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 12 ஆயிரத்து 812ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

### ஜெனிவா...
குறிப்பாக மாநாட்டின் ஆரம்ப நாளிலேயே இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின், வாய்மூல அறிக்கை முன்வைக்கப்படவுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது கூட்டத்தொடர் கடந்த ஜூன்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 14ஆம் திகதிவரை நடைபெற்றது. கொரோனா வைரஸ் பரவலால் இணையம் ஊடாகவே மாநாடு நடைபெற்றது. இம்முறையும் அவ்வாறே இடம்பெறவுள்ளது.
46ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா, ஜப்பான் உட்பட 14 நாடுகள் நடுநிலை வகித்தன.
இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட ஆறாவது தீர்மானம் அதுவாகும்.
மேற்படி தீர்மானத்தை இலங்கை நிராகரித்திருந்தாலும், இலங்கையால் சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தன. அவை நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் இம்முறை ஆராயப்படலாம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையிலும் இவ்விடயம் இடம்பெறவுள்ளது. இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.
அதேவேளை, சில அரச சார்பற்ற அமைப்புகளாலும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளாலும் மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்விவகாரம் பற்றியும் விவாதிக்கப்படவுள்ளது என இராஜதந்திர வட்டாரத்திலிருந்து அறியமுடிகின்றது. (ம-44)

### கொரோனாப்பலி...
அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.
77 ஆண்களும், 67 பெண்களும் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களுள் 30 வயதுக்குட்பட்ட பெண் ஒருவர் அடங்குகின்றார்.
நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 296ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

### 30 வயதுக்கு...
இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் இதுவரையில் 10 மில்லியன் பேருக்கு இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 11.4 மில்லியன் பேரை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையில், இதுவரை 10.54 மில்லியன் பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. எனவே குறித்த வயது பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. தவறியவர்கள் தடுப்பூசி பெறுவதை விரைவுபடுத்த வேண்டும். என்றார். (ம-4)

### அந்தோனியாராக...
அந்தோனியார் சிலை வைக்கப்பட்டுள்ளது.
சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ள குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.,
மடு பரப்புக்கடந்தான் வீதியில் மடு தேவாலயத்துக்கு அண்மையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அந்தப் பகுதியில் மரத்தின் கீழ் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்தது.
கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியில் சிறிய கோயில் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த நிலையில் முதல் கட்டமாக மூலஸ்தானம் அமைக்கப்பட்டு அதற்குள் தற்காலிகமாக பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில்தான் குறித்த பகுதியில் உள்ள பிள்ளையார் சிலையை சில விஷமிகள் அகற்றிவிட்டு அந்தோனியார் சிலையை வைத்துள்ளனர்.
பொலிஸார் இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-110)

### கொரோனாவால்...
ருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

### இலங்கை....
நுட்ப மற்றும் பாடசாலை கல்வி, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி துறையின் வளர்ச்சி மற்றும் சித்த மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் இலங்கை மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகள் விரிவுபடுத்தப்படவுள்ளன.
இதன் ஊடாக பல நூற்றாண்டுகள் பழமையான கல்வி மற்றும் கலாசார பாரம்பரியங்களைப் பற்றி இலங்கையர்களுக்கு அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன - என்றார்.
இரு நாடுகளுக்கும் இடையே தொழில்சார் மனிதவள பரிமாற்றங்கள் குறித்து ஆராயவும், கல்வி வாய்ப்புகள் மற்றும் கல்வி உதவித் தொகைகளைப் பாதுகாக்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. (ம-22)

### அரசியல்....
பலிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் இதில் கலந்துகொண்டனர். (கு-26)

### மயங்கியவர்....
டுள்ளது.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியைச் சேர்ந்த குறித்த வயோதிபப் பெண் ஆலயமொன்றில் நேற்று வணங்கிக் கொண்டிருந்த சமயம் நெஞ்சு வலிக்கின்றது என்று தெரிவித்து திடீரென மயக்கமடைந்து விழுந்துள்ளார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

### 4 மில்....
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
'100 மாணவர்களுக்கு குறைவாக உள்ள கிராமிய பாடசாலைகளில் கல்வி நடவடிக்கையை முதலில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் பொதுப் போக்குவரத்து பயன்படுத்தப்படுவதில்லை. இணைய வசதிகளும் இல்லை. எனவே, அவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.
அதேவேளை, 4 மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ளன. இவற்றை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கான பரிந்துரையை எதிர்பார்க்கின்றோம். நிபுணர் குழுவிடமிருந்து அந்த பரிந்துரை கிடைத்ததும் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பமாகும்.
அதேபோல விசேட தேவையுடைய, நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான பரிந்துரை கிடைத்துள்ளது. இவர்களுக்கு அடுத்தவாரம் முதல் பைஸர் தடுப்பூசி ஏற்றப்படும்.' என்றார். (ம-44)

### விபத்தில்....
மதியம் பொம்மைவெளியில் உள்ள அவரது வீட்டுக்கு முன்னால் சென்றபோது யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

### சந்தேக நபர்கள்....
சந்தேக நபர்கள் இருவர் திருகோணமலையில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
வல்வெட்டித்துறை வல்வெட்டியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நள்ளிரவு 12.30 மணியளவில் இந்தப் படுகொலை இடம்பெற்றது. சம்பவத்தில் சுப்பிரமணியம் கிருசாந்தன் (வயது30) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே கொல்லப்பட்டவர். சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் தலைமறைவான சந்தேக நபர்கள் இருவரும் திருகோணமலையில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர். (ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கங்குலியின் வாழ்க்கை படமாகிறது!

புதுடில்லி, செப். 13

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தற்போதைய தலைவருமான கங்குலியின் வாழ்க்கை வரலாறு படமாக எடுக்கப்படவுள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டு இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அறிமுகமாகி முதல் போட்டியிலேயே சதம் அடித்து அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர் கங்குலி. 2ஆவது டெஸ்ட்டிலும் சதம் அடித்து அனைவரையும் கங்குலி வியப்புக்குள்ளாக்கினார். 1997ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக தொடர்ந்து 4 முறை ஆட்டநாயகன் விருதை கங்குலி வென்றுள்ளார்.

2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய அணிக்குள் ஆட்டநிர்ணயக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதும் கங்குலி தலைமைப் பொறுப்பை ஏற்றார். மிக நெருக்கடியான நேரத்தில் அணியை திறம்பட வழிநடத்தினார். (ம)



# அமெ. பகிரங்கம் எம்மா சம்பியன்!

வொஷிங்டன், செப். 13

**அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மகத்தான சாதனையுடன் கிண்ணம் வென்றார் 18 வயதேயான எம்மா ரடுகனு. இந்தத் தொடரில் ஒரு செற்றையேனும் இழக்காமல் இந்த மகத்தான சாதனையை அவர் படைத்தார்.**



நேற்று அதிகாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் எம்மாவை எதிர்த்து பெர்னாண்டஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்ற கணக்கில் கைப்பற்றினார் எம்மா. அவர் அடுத்த செற்றையும் தன் பிடியில் கொண்டுவந்தார். அந்த செற்றும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் எம்மாவின் வசமானது. இதையடுத்து 2:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றார் எம்மா ரடுகனு.

இந்தத் தொடரில் அமெரிக்காவின் ஜாம்பவான் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸைத் தவிர முக்கிய வீராங்கனைகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். எனினும் அனைவரையும் வீழ்த்தி கிண்ணத்தைத் தனதாக்கினார் எம்மா.

முதலாவது லீக் ஆட்டத்தில் இருந்து இறுதியாட்டம் வரை எந்தவொரு செற்றையும் எம்மா பிறிதெவரிடமும் பறிகொடுக்கவில்லை. 18 வயதேயான வீராங்கனையொருவர் பகிரங்கத் தொடரில் நிலைநாட்டிய மகத்தான சாதனையாக இது பார்க்கப்படுகின்றது. (ம)

## இலங்கை அணி மீண்டும் தோல்வி

### தொடரையும் இழந்தது

கொழும்பு, செப். 13

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ரி20 ஆட்டத்திலும் இலங்கை அணி படுதோல்வியடைந்தது. இதையடுத்து ரி20 தொடரைக் கைப்பற்றுவதை தென்னாபிரிக்க அணி உறுதி செய்தது.

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி20 ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. இதனால் நேற்று நடைபெற்ற இரண்டாவது ரி20 ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் இலங்கை அணிக்கு ஏற்பட்டிருந்தது.

நீண்ட நாள்களின் பின்னர் அணிக்குள் குசல் ஜெனித் பெரேரா இடம்பெற்றிருந்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையிலேயே ஆட்டமிழந்தார் சந்திமல். குசல் பெரேரா ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனை பலவீனமானதாகவே உணரப்பட்டது. குசல் பெரேரா பெற்ற 30 ஓட்டங்களும், பானுக ராஜபக்ச பெற்ற 20 ஓட்டங்களும்தான் சொல்லிக்கொள்ளும் படியான பெறுபேறு. வேறு எவரும் பதின்மத்தை எட்டவில்லை. முடிவில் 103 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி.

பந்துவீச்சில் எய்டன் மார்க்ரம், சம்சி இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.


பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பவீரர்கள் இருவரும் சொல்லிக்கொள்ளும்படியான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். அணி 62 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹென்றிக்ஸ். மறுமுனையில் அதிரடி காட்டிக் கொண்டிருந்த குயின்டன் டி ஹொக்குடன் இணைந்தார் எய்டன் மார்க்ரம் வேறெந்த இலக்குகளையும் இலங்கை அணியால் சரிக்க முடியவில்லை. 14.1 பந்துப்பரிமாற்றங்களில் 105 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா.

குயின்டன் டி ஹொக் 57 ஓட்டங்களுடனும், எய்டன் மார்க்ரம் 21 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ரி20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் தென்னாபிரிக்காவுக்கே செல்லும். (ம)



## மன்செஸ்டர் யுனைற்ரெட்டில் ரொனால்டோ தாண்டவம்



லண்டன், செப். 13

இங்கிலாந்து பிறீமியர் லீக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூகஸ்டிலை 4:1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வீழ்த்தியது மன்செஸ்டர் யுனைற்ரெட்.

மன்செஸ்டர் யுனைற்ரெட்தான் ரொனால்டோவின் பேரெழுச்சிக்குக் காரணமான கழகம். ஒப்பந்தப் பிரச்சினைகளால் அந்தக் கழகத்தில் இருந்து ஸ்பெய்னின் ரியல் மட்ரிட்டுக்குச் சென்ற ரொனால்டோ அதன் பின்னர் இத்தாலியின் யுவன்டஸுக்காகவும் விளையாடினார். தற்போது ரொனால்டோ மீண்டும் யுனைற்ரெட்டுக்குத் திரும்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் மன்செஸ்டர் யுனைற்ரெட்டை எதிர்த்து நியூகஸ்டில் மோதியது. இந்த ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைற்ரெட் வெற்றிபெற்றது. ரொனால்டோ இரண்டு கோல்களைப் பதிவு செய்தார். 45ஆவது மற்றும் 62ஆவது நிமிடங்களில் அந்தக் கோல்களை அவர் பதிவுசெய்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.